NEW
TRINCO STATIONERS
இலவச ரிசீவர் –
பதிவு செய்யும் திறனுடன்
1, 3, 6, 12
மாதங்களுக்கான சன் டிரக்ட்
மேலும் அனைத்து வகையான
செய்மதி தொலைக்காட்சி சேவைகளும்
026 2223071, 077 7697184

July 06-12, 2013

# மலைமுரசு
MALAIMURASU

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்

அறைவு 01
இயம் 50

விலை – 25.00 Registered as a Newspaper in Sri Lanka பக்கங்கள் – 16 பிரதி சனி தோறும் திருமலையில் இருந்து வெளியாகும் பத்திரிகை

# 13தி கிழக்கில் தோற்கும்?

கிழக்கு மாகாண சபையில் கொண்டு வரப்படவுள்ள 13வது திருத்தத்தின் மீதான திருத்தங்களுக்கு ஆதரவளிக்கும் தீர்மானத்தை எதிர்த்து வாக்களிக்கவுள்ளதாக எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவெடுத்துள்ளது.

இம் முடிவிற்கு வலுச் சேர்க்கும் விதமாக கிழக்கு மாகாணசபையின் ஆட்சிக் கட்டில் அரசுடன் பங்காளிக் கட்சியாகத் தொழிற்படும் முஸ்லிம் காங்கிரசும் இத் தீர்மானத்தை எதிர்க்கும் முடிவை எடுத்துள்ளதாக நம்பகரமாகத் தெரியவருகின்றது.

இவ்விரு கட்சிகளினதும் முடிவால் 13வது திருத்தத்தில் மேலதிக திருத்தங்களை மேற்கொள்ளும் முயற்சிக்கு ஆதரவாகக் கொண்டு வரப்படவுள்ள தீர்மானம் தோல்வியடையும் நிலையில் இருக்கின்றது.

எனினும் அவ்வாறான ஆதரவளிக்கும் தீர்மான வரைபு மாகாணசபை அங்கத்தவர்கள் எவராலும் தற்போதுவரை தனது பார்வைக்கு அனுப்பி வைக்கப்படவில்லை என கிழக்கு மாகாண சபைத் தவிசாளர் ஆரியவதி கலப்பதி அவர்கள் தெரிவித்துள்ளார். 11

## ஜேர்மனிய அரச ஆதரவுடன் தமிழர் தலைமைகள் ஒன்றிணைவு?





இலங்கைத் தமிழர்களின் பிரச்சனையைத் தீர்ப்பதற்குப் பொதுவான தந்திரோபாயம் ஒன்றை உருவாக்குவதற்கான முயற்சியில் ஜெர்மனிய அரசின் முகவராண்மை நிறுவனம் ஒன்று ஈடுபட்டு வருகின்றது என்ற தகவல் தென்இலங்கையில் பரவியுள்ளது.

இம் முகவராண்மை நிறுவனமானது வடக்கில் நிகழ்ந்த இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இலங்கையை விட்டகன்ற சர்வதேசத் தன்னார்வத் தொண்டு நிறுவனம் ஒன்றின் தாய் நிறுவனம் எனத் தெரிகின்றது.

தேசியத் தமிழர் பிரச்சனைக்குத் தீர்வொன்றைப் பெற்றுக்கொள்வதற்கான பொதுத் தந்திரோபாயத்தில் மூன்று 11

## கோபாலபுரத்தில் கொலை முயற்சி

திருகோணமலை, கோபாலபுரத்தைச் சேர்ந்த விவசாயி ஒருவரைத் தனிப்பட்ட பகைக்காக கொலை செய்யக் காத்திருந்த வனத்துறை அலுவலர் ஒருவர் கைதாகியுள்ளார்.

குச்சவெளி காவல்துறைப் பிரிவிற்கு உட்பட்ட கோபாலபுரம் பகுதியில் 03.07.2013 அன்று இரவு இவ் வனத்துறை அலுவலரும் அவரது சகபாடிகள் இருவரும் கொலை-செய்யப்பட வேண்டியவரின்.. 11

## விலை உயரும் டொலர் – உயருமா பொருட்களின் விலைகள் ??

அமெரிக்கப் பொருளாதாரத்தின் உறுதி நிலையைத் தொடர்ந்து அமெரிக்க டொலர் ஒன்றின் விலையானது இலங்கை ரூபாவில் 135 வரை அதிகரித்துள்ளது. இதனைத் தொடர்ந்து இவ்விலையேற்றம் கடும் பாதிப்புக்களை இலங்கைப் பொருளாதாரத்தில் ஏற்படுத்தலாம் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. தற்போதைய சந்தை நிலைவிபரங்களின் படி நாளாந்தம் டொலரின் விலை.. 11

## இரவோடு இரவாக புத்த பகவானின் சிலை

வாழைச்சேனை பிறைந்துறைச்சேனையின் முஸ்லிம் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் இரவோடிரவாக புத்தர் சிலையொன்று நிறுவப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை நிறுவப்பட்ட இப் புத்தர் சிலையைத் தானே நிறுவியதாக அருகிலுள்ள புத்த ஜெயந்தி விகாரையின் பிரதம விகாராதிபதி நாவான அபயவன்ஸ அலங்கார தேரர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் அக்காணி புத்த ஜெயந்தி விகாரைக்குரிய காணி ஆகும். 11

## உள்ளே...


- சிறுகதை
- கவிமுரசு
- சினிமுரசு
- விளையாட்டுப்பையன்
- விளையாட்டுமுரசு
- கல்விமுரசு
- சர்வதேசமுரசு
- தீன்முரசு


முரசின் புதிய அறைவு

மாணவர்களே, காத்திரமான படைப்புகளை அனுப்பி வையுங்கள்.

உங்கள் படைப்புகளுக்கு தன் பக்கங்களில் களம் தர மலைமுரசு தயாராக உள்ளது

## நிலாவெளி தமிழ் மகாவித்தியாலயத்தில் தொடரும் முரண்பாடுகள்
## சாலை மறியற் போரில் நிலாவெளி மாணவர்கள்

நிலாவெளி தமிழ் மகா வித்தியாலய மாணவர்கள் மீது கடந்த திங்கட்கிழமை பிரதேச இளைஞர்களால் நடத்தப்பட்ட தாக்குதலை கண்டித்து பாடசாலை.. 11



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

159A, 2ஆம் மாடி, கடல் முக வீதி,
திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042

## வணக்கம்

### ஒரே அச்சில் இயங்குதல்...

வெளிநாட்டு அரசொன்றின் ஆதரவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் உலகத் தமிழர் பேரவை ஆகிய அமைப்புக்கள் தமிழர் பிரச்சனைத் தீர்வுச் செயற்பாட்டினை நோக்கிய தத்தமது தந்திரோபாயங்களை ஒரே அச்சில் அமைத்துக் கொள்ளும் முயற்சியில் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

தமிழர் பிரச்சனைக்கான தீர்வொன்றைக் கண்டுகொள்ள பல்முனைச் செயற்பாடுகள் தேவை என்பதையே போரின் பின்னரான கடந்த நான்கு ஆண்டுகளும் எமக்குக் கற்பித்துள்ளன. தமிழர்களின் ஆதர்சனத் தலைவர்கள் பலர் இதனை தமது ஆற்றலால் முன்னுணர்திருந்தனர். ஆனாலும் இந்த நான்கு ஆண்டு காலப்பகுதியில்தான் பன்முனைச் செயற்பாட்டுத் தேவையொன்றை உலக நாடுகளும் உணரத் தொடங்கியுள்ளன.

இக் காலத்தைச் சிறப்பாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமாயின் தமிழருக்காக போராடிவரும் அமைப்புக்கள் யாவும் ஒரே அச்சின் கீழ் இயங்குவது இன்றியமையாதது.

“எல்லா மதங்களும் இறைவனைத்தான் சென்றடைகின்றன” என்ற வாக்கைப் போல எல்லா அமைப்புக்களும் ஒரே இலக்கை நோக்கித் தத்தமது வழிகளிற் செயற்படுமாயின் அவ்விலக்கை அடைந்துகொள்ள முடியும்.

இங்கு இன்னும் இரண்டு அமைப்புக்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டிய தேவைகள் இருக்கின்றன. முதலாவது அமைப்பு உள்நாட்டிலுள்ள தமிழ் பேசும் முஸ்லிம்களின் உறுதியான அமைப்பு. இரண்டாவது தமிழ்நாட்டிலுள்ள தலைமை தாங்கும் அமைப்பு அல்லது அரசியல் தலைவர்களில் ஒருவர்.

இவ்வாறு ஒன்று சேர்க்கப்படும் ஐந்து அமைப்புக்களையும் பொதுவான அச்சில் இயங்கச் செய்தால் சிறுபான்மைத் தமிழ் இனத்தின் இலக்கை அடைதல் இலகுவாகும். இங்கு மிகப் பெரும் தடையாக இருப்பது எது தெரியுமா? தற்போதுவரை எமக்கு என்ன தீர்வு வேண்டும் என்பதை எமது அரசியற் தலைமை இன்னமும் உருவாக்காமல் இருப்பது தான்.

எமது பிரச்சனைக்குத் தீர்வு என்ன? என்பதைத் தெளிவரப் புரிந்து அதனை அப்பட்டமாக வெளிக் கொணர்ந்தால் மட்டுமே அதனை நோக்கி அனைத்து செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட முடியும்.

உண்மையில் நீங்கள் சொல்லுங்கள். சிறுபான்மை இனங்களான எமக்கு தேவையான உண்மையான தீர்வு என்ன?

தெளிவாகத் தெரிகின்றதா எமது பலவினம்?..........

# “மகிந்த சிந்தனையில் மூதூர் தளவைத்தியசாலையின் பங்கு எங்கே?” கிளர்ந்தெழுந்தனர் மூதூர் மக்கள்

(ஜெயகரன், ஜவாகிர்)



மூதூர் தள வைத்திய சாலையின் குறைகளால் அல்லலுறும் மக்கள் அண்மையில் ஆர்ப்பாட்டப் பேரணியொன்றை மூதூர் நகரில் நிகழ்த்தியுள்ளனர்.

இப் பேரணி மூதூர் பொதுவிளையாட்டு மைதானத்திலிருந்து ஆரம்பித்து பிரதான வீதி வழியாக கலாசார மண்டபம்வரை சென்று தளவைத்திய சாலை வாயிலில் பொதுக் கூட்டமொன்றை நிகழ்த்தியுள்ளது.

அங்கு உரையாற்றிய மூதூர் பிரதேசசபையின் முன்நாள் தவிசாளர் திடீர் தௌபீக் ஊடக நேர்காணல் ஒன்றையும் நிகழ்த்தி தமது ஆர்ப்பாட்டத்திற்கான அடிப்படைகளை மும் மொழிகளிலும் விளக்கியுள்ளார்.

அதன் பின்னர் பிரதேசச் செயலகம் வரை நகர்ந்த ஆர்ப்பாட்டப் பேரணி பிரதேசச் செயலரிடம் மக்கள் முறைப்பாடொன்றைக் கையளித்த பின் கலைந்து சென்றுள்ளது.

## சூரிய ஒளியின் கீழ் மின் கலங்கள் வழங்கும் நிகழ்வின் ஒரு பகுதி மூதூர் பிரதேச செயலகத்தில்

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி நீர்ப்பாசளம் வீடமைப்பு நிர்மானமும், கிராமிய மின்சாரம் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் கௌரவ எம்.எஸ். உதுமாலெப்பை அவர்களின் ஒதுக்கீட்டின் கீழ் சூரிய ஒளியின் கீழ் மின் கலங்கள் வழங்கும் நிகழ்வின் ஒரு பகுதி அண்மையில் 27.06.2013 மூதூர் பிரதேச செயலகத்தில் தேசிய காங்கிரஸின் இளைஞர் அமைப்பாளர் டொக்டர். வை.எஸ்.எம் ஸியா அவர்களினால் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்விற்கு அமைச்சரின் பிரத்தியேக உதவியாளர் ஜனாப். எம்.எஸ். ஜான், மூதூர் பிரதேச செயலகத்தின் திட்டமிடல் பணிப்பாளர், அக்கரைச்சேனை கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் மற்றும் தேசிய காங்கிரஸின் மூதூர் பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.



## திருக்கோணேஸ்வரா வித்தியாலயத்தில் தீப்பாசறை நிகழ்வு



பெரியகுளம் தி/திருக்கோணேஸ்வரா வித்தியாலயத்தில் திருகோணமலை மாவட்ட அபிவிருத்திச் சங்கமும் றூம் டு றீட் நிறுவனமும் இணைந்து நடைமுறைப்படுத்தி வரும் வாசிப்பறை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பெற்றோர்களின் பங்களிப்பை கூட்டுவதற்காக மாலை 6.00 மணியளவில் தீப்பாசறை நிகழ்வு ஆரம்பமானது. மாணவர்களின் கல்வி சார் நிகழ்ச்சிகளும் பெற்றோர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் நடைபெற்றது. இவ் நிகழ்வில் திருகோணமலை மாவட்ட அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் ப. கந்தசாமியும் றூம் டு றீட் நிகழ்ச்சித்திட்ட அதிகாரி சே. இராஜேந்திரன் உதவிக் கல்வி பணிப்பாளர் எஸ்.தருமலிங்கம் மற்றும் எஸ்.தவநாதன் பாடசாலை அதிபர் எஸ்.தயாளலிங்கம் வாசிப்பறை நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் த.கஜறூபன் ஆகியோர் கலந்து கொண்டனர். பெரியகுளம் மற்றும் திருமால் புர பெற்றோர்களின் நிகழ்ச்சிகளும் இடம் பெற்றது. இவர்களால் நிகழ்ச்சிக்கு வருகை தந்த அனைவருக்கும் இராப்போசனமும் வழங்கப்பட்டது.

மாலை நேரங்களில் இவ்வாறான நிகழ்வுகளை நடத்துவதால் அதிகமான பெற்றோர்களை உள்வாங்க முடியும் எனவும் மாணவர்களின் திறமைகள் மற்றும் பெற்றோர்களின் பங்களிப்பு எவ்வாறு இருக்க வேண்டும் என்பதையும் அவர்களால் உணர்ந்து கொள்ள முடியும் என சிறப்பு விருந்தினர் உரையாற்றிய திருகோணமலை மாவட்ட அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் ப. கந்தசாமி அவர்களால் கூறப்பட்டது இரவு 9 மணிவரை நிகழ்வு நடைபெற்றது.

## அன்பு இல்ல நிர்வாகிகள் தெரிவு பிற்போடப்பட்டது

கடந்த வியாழக்கிழமை மாலை 4.30 மணியளவில் திருகோணமலை மத்திய வீதியில் அமைந்துள்ள அன்பு இல்லத்தில் புதிய நிர்வாக உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான அமர்வு இடம்பெற்றது. முன்னைய நிர்வாகத்தில் இடம்பெற்ற குளறுபடிகள் தொடர்பான காரசாரமான இடம் பெற்றதன் காரணமாக இறுதியில் புதிய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு இரண்டு வார காலத்திற்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோவிலில் அகப்பட்டது ஆயுத சாலை



அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பகுதியில் சட்டவிரோத ஆயுத உற்பத்திச் சாலையொன்றைக் காவல்துறையினர் கண்டு பிடித்துள்ளனர்.

காவல்துறையினருக்குக் கிடைத்த துப்பு ஒன்றின் அடிப்படையில் சுற்றிவளைப்பை மேற்கொண்ட போதே இச் சட்டவிரோத ஆயுத உற்பத்திச் சாலை திருக்கோவில் இராமசுவாமி வீதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அப்போது 3 சுடுகளன்களும் அதற்குப் பயன்படுத்தும் 3 வெற்று ரவைக் கூடுகளும், வெடிமருந்தும் கையகப்படுத்தப்பட்டுள்ளன என காவல்துறைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## மண்டூர் இளைஞர்களுக்கு தலைமைத்துவப் பயிற்சி



தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அனுசரணையுடன் மண்டூரில் வாழும் இளையோருக்கு வாழ்க்கைத்திறன் மற்றும் அறிவுத் திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மண்டூர் ஸ்ரீ இராமகிருஸ்ண வித்தியாலயத்தில் நடைபெற்ற இச் செயலமர்வுகளில் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற திட்ட இணைப்பாளர் திரு. கிருபைராசாவின் வழிகாட்டலில் வளவாளர் திரு. மகேந்திரராசா அவர்கள் பயிற்சிகளை வழங்கினார். இப் பயிற்சிகள் தலைமைத்துவம் மற்றும் வழிகாட்டல் ஆகியவற்றை விருத்தி செய்யும் விதமாக வடிவமைக்கப்பட்டிருப்பதாக கலந்து கொண்டோர் மலைமுரசிற்குத் தெரிவித்தனர்.

## கெவிளியாமடுவில் அத்துமீறிக் குடியேறியவர்கள் யார்?



மட்டக்களப்பு மாவட்டத்தின் கெவிளியாமடுப் பிரதேசத்தில் கைவிடப்பட்டிருந்த வீடுகளில் போருக்குப் பின்னர் அத்து மீறிக் குடியேறியவர்களை அங்கிருந்து வெளியேறுமாறு பிரதேசச் செயலாளர் அறிவித்தல்களை விடுத்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து இவ்விடயத்தை சனாதிபதிக்கு கடிதம் மூலம் அறிவித்த மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி மாவட்டச் செயலாளருக்கும் இவ்விடயம் தொடர்பாக கலந்துரையாடியிருந்தார். பட்டிப்பளைப் பிரதேசச் செயலாளர் பிரிவிற்குட்பட்ட கெவிளியாமடுக் கிராமத்தில் நடைபெற்றுள்ள இவ் அத்துமீறல் தொடர்பாக விசாரித்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கென மாவட்ட செயலாளரும் அரச அதிபருமான திருமதி.பி.எஸ்.எம் சாள்ஸ் அவர்கள் குழுவொன்றை நியமித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் "1990ஆம் ஆண்டுக்கு முன்னர் கெவிளியாமடு கிராமத்தில் குறித்த மக்கள், அவர்களது மூதாதையர்கள், பரம்பரையினர் குடியிருந்தமையினை உறுதிப்படுத்தினால், அவர்கள் இக்கிராமத்தில் குடியிருக்கலாம். அவ்வாறில்லாத பட்சத்தில் அத்துமீறிக் குடியேறிய-வர்களாகக் கருதப்படுவர். அதேநேரம், குடியிருந்தமை நிரூபிக்கப்பட்டால் சகல வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்" என அரசாங்க அதிபர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

## மனித நுகர்விற்கு உதவாத பொருட்களை மடக்கிப் பிடித்தனர் சுகாதார உத்தியோகத்தர்கள்

மட்டக்களப்பு சுகாதார பிரிவுக்குட்பட்ட பகுதியில் சுகாதாரத்துக்கு உதவாத பொருட்களை விற்பனை செய்த இருவருக்கு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் தலா ஆராயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

நேற்று உணவு மற்றும் பழக்கடைகளில் மேற்கொள்ளப்பட்ட சுகாதார கண்காணிப்பு நடவடிக்கையின்-போது சுகாதாரத்துக்கு கேடுவிளை-விக்ககூடிய பொருட்களை விற்பனை-செய்தோர் மற்றும் சுகாதாரத்துக்கு தீங்கானமுறையில் உணவு விடுதியை வைத்திருந்தமை ஆகியவை தொடர்பில் இருவருக்கு எதிராக மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

மட்டக்களப்பு கோட்டைமுனை பொதுச்சுகாதார பரிசோதகர் மணிமாறன் மற்றும் பொதுச்சுகாதார பரிசோதகர் வா.ரமேஸ்குமார் மற்றும் மட்டக்களப்பு பொலிஸ் நிலைய சுற்றாடல் பிரிவினர் இணைந்து இந்த சுற்றிவளைப்பினை மேற்கொண்டனர்.

## இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான வர்த்தகம் 10 பில்லியன் டொலர்களாக உயரும்

அடுத்து வரும் மூன்று ஆண்டுகளுக்குள் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான வர்த்தகத்தை 100 மடங்கால் பெருக்கிக் கொள்ளும் முடிவினை இரு நாடுகளும் எட்டியுள்ளன.

தற்போது 5 பில்லியன் அமெரிக்க டொலர்களாக உள்ள இரு நாட்டு வர்த்தகத்தையும் அடுத்து வரும் மூன்று ஆண்டுகளுக்குள் 100 பில்லியன் டொலர்களாக்குவதற்கான உடன்பாட்டை இரு நாடுகளும் கடந்த 24ம் 25ம் திகதிகளில் கொழும்பில் நிகழ்ந்த வர்த்தகக் கூட்டத் தொடரில் எட்டியுள்ளன.

இலங்கையின் மிக முக்கிய வர்த்தகப் பங்காளியான இந்தியாவுடன் வர்த்தகத்தைப் பெருக்கிக்கொள்வது முக்கியமானது என இலங்கை அரசின் குறிப்புக்கள் தெரிவிக்கின்றன.

இந்தியா இலங்கையில் பொதுப் போக்குவரத்துத்துறை மற்றும் வடகிழக்கில் வீடமைப்புத்துறை போன்றவற்றில் தமது முதலீடுகளைச் செய்திருப்பதுடன் இலங்கைக்கு இயந்திர உபகரணங்கள் இயற்கை எரிவாயு, இரும்பு, மருத்துவப் பொருட்கள் என்பவற்றை ஏற்றுமதி செய்வதுடன் இயற்கை இறப்பர், கால்நடைத் தீவனம், தாமிரம் மற்றும் பத்திரிகை ஆகியவற்றை இறக்குமதி செய்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## மலைமுரசின் 50வது வார இதழின் வருகையை வாழ்த்துகின்றேன்



திரு. சி. தண்டாயுதபாணி
கிழக்கு மாகாணசபை
எதிர்க்கட்சித் தலைவர்

திருகோணமலையின் பத்திரகை உலகில் மலைமுரசு என்ற வாரப் பத்திரிகையின் வரவு குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய முக்கியத்துவம் உடையதாக அமைகின்றது. திருகோணமலையில் அவ்வப்பபோது சிற்றிதழ்களின் வருகை பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் ஆக்க இலக்கியவாதிகளின் முயற்சியால் பல வெளியீடுகள் வெளியாகிய வண்ணம் உள்ளன. எனினும் மலைமுரசு திருகோணமலை மாவட்டத்திற்கான முதலாவது பதிவு செய்யப்பட்ட பத்திரிகையாக வெளிவந்து இன்று தனது 50வது வாரத்தைக் கடக்கின்றது. கொழும்பு, யாழப்பாணம், மட்டக்களப்பு, கண்டி போன்ற மாவட்டங்களுடன் ஒப்பிடும் போது திருகோணமலை மாவட்டத்தில் அச்சுப்பதிப்பு வசதிகள் குறைவாகவே உள்ளன. அந்நிலையிலும் மலைமுரசு 50 வாரங்கள் தொடர்ச்சியாக வெளிவந்துள்ளமை ஒரு வரலாற்றுப் பதிவாகவே உள்ளது. மலைமுரசின் வருகையை திருகோணமலை மாவட்ட மக்கள் பலர் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கின்றனர் என்பதை நான் அறிவேன். இப்பத்திரிகை நெருக்கடியான சூழ்நிலைகளில்கூட தொடர்ந்து திருமலை மாவட்டச் செய்திகளை வெளிக்கொணர்ந்திருப்பதால் தனக்கென ஒரு வாசகர் வட்டத்தை உருவாக்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. திருகோணமலை மாவட்டத்தின் பத்திரிகைத் துறைக்கான உறுதியான அடித்தளமாக மலைமுரசு மாறியுள்ளது. அதற்காக திருகோணமலை மாவட்ட மக்கள் சார்பில் மலைமுரசின் வெளியீட்டாளர்களுக்கும், அதன் பிரதம ஆசிரியருக்கும், ஆசிரியப் பீடத்தினர்க்கும், ஊடகவியலாளர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த 50வது இதழுடன் திருகோணமலை மாவட்டத்திற்கும் அப்பால் கிழக்கு மாகாண[illegible] மேற்கொள்ளவுள்ள மலைமுரசு தன[illegible] முன்னேற வேண்டும் என்பதே எமது விருப்பம். நன்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செய்திக் குறிப்புகள்

### 50 வருடங்களில் சிங்களவரின் பலம்

இலங்கையில் சிங்களவர்-களின் பலம் இன்னும் 50 வருடங்களில் இருக்கும் என அஸ்கிரிய மகாநாயக்க தெரிவித்துள்ளார். தூர நோக்கற்ற சிங்கள மக்களின் செயற்பாடுகளால் அவர்களின் கலாசாரம் 50 வருடங்-களில் முழுமையாக அழிந்துவிடும் என தெரிவித்தார். மேலும் சிறிய தொகைக்காக தமது பரம்பரை காணிகளை மற்றைய இனங்களுக்கு விற்பதும் இதற்கு ஒரு காரணம் என தெரிவித்துள்ளார்.

### 13ல் திருத்தங்கள் – ஈ.பி.டி.பி ஆதரவளிக்காது

13வது திருத்த சட்டத்தில் மாற்றங்களை உண்டு பண்ண முயற்சிக்கும் அரசின் செயற்பாட்டிற்கு ஈ.பி.டி.பி ஒருபோதும் ஆதரவளிக்காது என அதன் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

### தொலைபேசியை ஒட்டுக்கேட்டது றோ

பாதுகாப்பு செயலர், பாதுகாப்பு உயர்மட்டத்தினரின் தொலைபேசிகள் ஒட்டுக்கேட்கப்பட்ட செய்தி கசிந்ததை தொடர்ந்து விசாரணைகளின் போது அதன் பிண்ணனியில் இந்தியாவின் றோ இருப்பதாக தெரியவருகிறது.

### பசில் இந்தியாவுக்கு மேனன் இலங்கைக்கு

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச சனாதிபதியின் ஆலோசனையின் பெயரில் இந்தியா பயணமாகவுள்ளார். அதேவேளை இந்தியாவிலிருந்து சிவசங்கர்மேனன் இலங்கை வருவார் என தெரிய வருகிறது.

### மணலாறில் புதிதாய் சிங்கள கிராமம்

ராணுவத்தினரின் குடும்பங்-களை குடியேற்றி மணலாறில் ரணவிரு பியச சம்பத் நுவர என்ற கிராமம் புதிதாய் உருவாக்கப்பட்டுள்ளது. 52 படையினரின் குடும்பங்கள் இக் கிராமத்தில் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

### வடமாகாண முதலமைச்சர் வேட்பாளராக மாவை

நடைபெறவுள்ள வடமாகாண சபை தேர்தலில் தமிழ்தேசிய கூட்டமைப்பின் சார்பில் அதன் சிரேஸ்ட தலைவர்களில் ஒருவரான மாவை சேனாதிராஜாவை முதலமைச்சர் வேட்பாளராக நியமிக்கும் எண்ணம் இருப்பதாக தெரிய வருகிறது.

### இறுதி யுத்தத்தில் நடந்ததை அறிய சர்வதேச விசாரணை – நவநீதம்பிள்ளை

சர்வதேச விசாரணை ஒன்றுக்கு இலங்கை உட்படுத்த வேண்டும் என மீண்டும் நவநீதம்பிள்ளை வலியுறுத்தியுள்ளார். யுத்தத்தின் இறுதி நாட்களில் நடந்தது என்ன என்ற உண்மையை அறிவதற்கு சர்வதேச விசாரணை ஒன்று நம்பத்தகுந்த முறையில் நிகழ்த்தப்பட வேண்டும் என அவர் தெரிவித்தார்.

# சிசிலியா பெண்கள் கல்லூரியில் கல்விக் கண்காட்சி

மட்டக்களப்பு பெண்கள் கல்லூரியான சிசிலியா பெண்கள் கல்லூரியின் வருடாந்தக் கண்காட்சியானது வியாழக்கிழமை தொடக்கம் நடைபெற்றுவருவதாக சிசிலியா பெண்கள் தேசிய பாடசாலையின் அதிபர் அருட்செல்வி எம்.எலிசபெத் தெரிவித்தார்.

இக் கண்காட்சி தொடர்பில் ஊடகவிலாளர்களை தெளிவுபடுத்தும் கூட்டம் பாடசாலையில் இடம்பெற்றது. இங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

புத்தக கல்வியை மட்டும் கொண்டுள்ள மாணவர்களை தேடுதல்கள் செய்வதன் மூலம் அவர்களை ஒரு சிறந்த வளப்படுத்தப்பட்ட சமுதாயமாக உருவாக்கமுடியும். இதனை நோக்காகக் கொண்டே இந்த கண்காட்சி ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.

.இந்த கண்காட்சிக்கு பிரதம அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட மறைமாவட்ட ஆயர் பொன்னையா ஜோசப் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் உட்பட கல்வித்திணைக்கள அதிகாரிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

மூன்று தினங்கள் இடம்பெறவுள்ள இந்த கண்காட்சியை காலை 8.30மணி தொடக்கம் மாலை 6.00மணி வரை பொதுமக்கள் பார்வையிடமுடியும்.

இந்த கல்வி கண்காட்சியில் அனைத்து பாடப்பரப்புகளையும் உள்ளடக்கியதாக 52 கண்காட்சி கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அத்துடன் இதன்போது அரங்க நிகழ்வுகளை உள்ளடக்கியதான நிகழ்வுகளும் கண்காட்சிப் படுத்தப்படவுள்ளது.

மாணவர்கள் சிறந்த தேடலை மேற்கொள்வதன் மூலம் சிறந்த சிந்தனை வளர்ச்சியும் அவர்களிடம் ஏற்படுகின்றது.அவர்களை தொடர்ந்து புத்தக பூச்சிகளாக வைத்திருக்க முடியாது. இந்த கண்காட்சியானது எங்களது நீண்டகால கனவாக இருந்தது.

இந்தப்பணிக்கு பாடசாலை அபிவிருத்திச்சங்கம்,பெற்றோர் ,பழைய மாணவர்கள் பூரண ஆதரவு வழங்கிவருகின்றனர். இந்த கண்காட்சியூடாக ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையில் சிறந்த உறவு கட்டிவளர்க்கப்படுகின்றது.

மட்டக்களப்பில் தங்களது விளையாட்டுகளை மேற்கொள்வதற்கான மைதானம் இல்லாத நிலையில் அவர்கள் தொடர்ந்து கல்வியை மட்டுமே பெற்றுவந்தனர். இந்த நிலையில் அவர்களின் சிந்தனையை புத்துணர்வை ஊட்டும் வகையிலும் இந்த கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன்மூலம் மாணவர்கள் மத்தியில் புதைந்து கிடக்கும் திறமைகளை வெளிக்கொணரும் வகையில் இந்த கண்காட்சியில் மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த கண்காட்சியின் மூலம் மாணவர்கள் தொடர்ச்சியான தேடலைக்கொள்ளக்கூடிய நிலையேற்பட்டுள்ளதால் மாணவர்கள் மத்தியில் ஏற்படும் தவறான சிந்தனைகளும் மாற்றம் பெறக்கூடியதான வாய்ப்புகள் ஏற்படும்.

இந்த கண்காட்சியை பார்வையிடவருவோரிடம் நுழைவுக்கட்டணம் அறவிடப்படுவதுடன் அந்த பணம் பாடசாலையின் அபிவிருத்திக்கு செலவுசெய்யப்படவுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.



## வெளிச்சமடைந்தது புதுமுன்மாரிச் சேலைக் கிராமம்



வெல்லாவெளிப் பிரதேசத்திலுள்ள புதுமுன்மாரிச் சோலைக் கிராமமானது பல வருடங்களாக மின் வசதியற்றிருந்தது. தற்போது அக் கிராமத்திற்கு உத்தியோகபூர்வமாக மின் வசதி வழங்கப்பட்டுள்ளது. இவ்விழாவில் மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் முரளிதரன் அவர்களும் மின் அத்தியட்சகர் அனுசாந்தன் மற்றும் பிரதேசச் செயலர் வில்வரத்தினம் உட்பட கிராம மக்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

## கடையுடைத்துத் திருட்டு கைதாகிய மாணவர்கள்

புதூர் திமிலைதீவில் சில்லறைக் கடையொன்றின் கூரையைப் பிரித்துக் கொள்ளையில் ஈடுபட்ட பாடசாலை மாணவர்கள் இருவரையும் சிறுவர் பராமரிப்பு நிலையத்திற்குக் கையளிக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். இக் கையளிப்பை சிறுவர் பராமரிப்பு மற்றும் நன்னடத்தை திணைக்களம் ஊடாக மேற்கொள்ளுமாறும் உத்தரவிட்ட நீதிபதி மேலும் இரு சந்தேக நபர்களுக்குப் பிணையளித்துள்ளார்.

இக் கொள்ளையில் 14,500 ரூபாப் பொருட்களும் 6000 ரூபா பணமுமே கொள்ளையிடப்பட்டவை ஆகும். இக் கொள்ளையுடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் நால்வரை மட்டக்களப்புக் காவல்துறைக் குற்றப்புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி சாந்தகுமார் தலைமையிலான குழுவினர் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்ட போது அந் நால்வரும் குற்றத்தை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இந் நால்வரும் 13 வயது தொடக்கம் 15 வரையானவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

## வைத்தியசாலைக்கு காணி வழங்கியது செட்டிப்பாளையம் கண்ணகி அம்மன் ஆலயம்

செட்டிப்பாளையம் கிராமிய வைத்தியசாலைக்கு கட்டிடம் அமைப்பதற்காக இலவசமாக சுமார் ஒன்றரை ஏக்கர் காணியை கண்ணகி அம்மன் ஆலயம் வழங்கியுள்ளது.

## வாழ்த்துகின்றேன்



திருகோணமலை மாவட்டத்திற்காக வெளிவரும் ஒரேயொரு பத்திரிகையெனும் முறையில் நாங்கள் அனைவரும் எமது முழுமையான ஆதரவை வழங்கி வருகின்றோம். மேலும் ஓர் சிறந்த பத்திரிகைக்கான அனைத்து குணாதிசயங்களையும் எமது மலைமுரசு கொண்டிருப்பது பெரு மகிழ்ச்சி தருகிறது.

திருகோணமலைக்கென்று ஓர் பத்திரிகை வெளிவருகின்றதென்றால் அது திருமலைவாழ் மக்கள் அனைவரும் ஆதரித்து பெருமைகொள்ளக்கூடிய ஒரு விடயமாகும். இப்பத்திரிகை இத்துடன் மட்டும் நின்றுவிடாது மென்மேலும் வளர்ந்து அதிகளவு வாசகர்களை தம்மகத்தே ஈர்க்கவேண்டுமென்றும், அவர்களது இப்பொதுச்சேவை சிறப்புற தொடரவேண்டுமென்றும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்பதோடு வாழ்த்துகின்றேன் தெரிவிக்கின்றேன்.

ஐயா (லேடிஸ் சென்ரர்)

## செய்திக் குறிப்புகள்

### கூட்டமைப்பு பல்டி அடித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை – கஜேந்திரகுமார்

தமிழ்தேசிய கூட்டமைப்பு தமது முடிவுகளை திடீரென மாற்றிக் கொண்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என கஜேந்திரகுமார் தெரிவித்துக் கொண்டார். ஏனெனில் 13வது திருத்தச் சட்டம் தொடர்பாக கலந்தாய்வு மேற்கொள்வதற்காக உருவாக்கப்பட்ட தெரிவுக்குழுவில் தமிழ்தேசிய கூட்டமைப்பு அங்கம் வகிக்கப் போவதில்லை என்ற தற்போதைய முடிவை இந்தியாவின் அழுத்தத்தினால் சில வேளைகளில் மாற்றிக் கொள்ளலாம் என அவர் மேலும் தெரிவித்தார்.

### 13 தொடர்பில் இந்தியா தலையிடக்கூடாது

13வது திருத்தம் தொடர்பான நடவடிக்கையில் இந்தியா எவ்வகையிலும் தலையீட்டை மேற்கொள்ளகூடாது என வலியுறுத்தி பொதுபலசேனா மனு ஒன்றை கொடுக்கஉள்ளது. இம்மனு இந்திய தூதரிடம் வழங்கப்படவுள்ளது.

### வாக்காளர் பதிவு நீடிப்பு

ஜூலை 5ம் திகதி வரை வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாக்காளர்களாக பதிவு செய்ய முடியும் என தெரியவருகின்றது.

### ரைம்ஸ் சஞ்சிகைக்கு இலங்கையில் தடை

மியன்மாரில் முஸ்லீம்களுக்கு எதிராக நிகழும் வன்முறைகளுக்கு தலைமை தாங்கும் பிக்குவான விராது மற்றும் பௌத்தம் 969 என்ற அமைப்பையும் இலங்கையில் பொதுபலசேனாவுடன் ஒப்பிட்டு ரைம்ஸ் சஞ்சிகை கட்டுரை ஒன்றை வரைந்திருந்தது. அச்சஞ்சிகைக்கு இலங்கையில் தடை விதிக்கப்பட்டுள்ளது.

### வாழைச்சேனையில் தமிழர்கள் மீது தாக்குதல்

கொழுவாமடு பகுதியில் விவசாயம் செய்யும் தமிழ் விவசாயிகள் 22பேரை நேற்று தாக்குதலுக்கு உள்ளாக்கி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். வயல் நிலத்திற்கு நீர்பாச்சும் பிரச்சினை ஒன்றில் நியாயமான நடவடிக்கைகளை மேற்கொண்ட தமிழ் விவசாயிகளே தாக்கப்பட்டுள்ளனர்.

### இலங்கைக்கு வரும் அமெரிக்கர்களுக்கு எச்சரிக்கை

இலங்கையில் அதிக குற்றச் செயல்களும் பாலியல் வன்முறைகளும் வெளிநாட்டவர்களுக்கு எதிராக நிகழ்த்தப்படுவதால் இலங்கை வரும் அமெரிக்கர்கள் அவதானமாக இருக்குமாறும் தமது பதிவுகளை முறையாக மேற்கொள்ளுமாறும் அமெரிக்க ராஜாங்க திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

### பிக்குவின் துடுப்பு மட்டை தாக்குதல் குடும்பஸ்தர் பலி

காலி அக்மிமண பிரதேசத்தின் லபுதுவ விகாரையின் பிக்கு ஒருவரும் மேலும் இரு இளைஞர்களும் சேர்ந்து குடும்பஸ்தர் ஒருவரை துடுப்புமட்டையால் அடித்து கொலை செய்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசமுரசு

## இலங்கையின் அணுக்கல்விக்கு இரஸ்யா உதவி



அணுக்கல்வி மற்றும் அணுத்திட்ட நடவடிக்கைகளுக்கு இலங்கைக்கு உதவ இரஸ்யா முன்வந்துள்ளது.

அதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கையினை இலங்கையும், இரஸ்யாவும் உருவாக்கியுள்ளன.

இப்புரிந்துணர்வின் படி முதற்கட்டமாக இலங்கை விஞ்ஞானிகளுக்கு இரஸ்யாவில் அணுக் கல்விப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. அதன்பின்னர் இலங்கையில் அணுத் திட்டம் தொடர்பான ஆரம்பக் கட்ட திட்ட மொழிவுகளை மேற்கொண்ட பின்னர் இலங்கையுடன் சேர்ந்து அணு உட்கட்டுமான நடவடிக்கையிலும் இரஸ்யா உதவி புரியவுள்ளது.

இவற்றுடன் அணுக் கழிவுகளை அகற்றுதல், அணு ஆராய்ச்சிகள், அணுமூலப் பொருட்கள் போன்ற விடயங்களிலும் இலங்கைக்கு இரஸ்ய உதவிகள் கிடைக்கப் பெறவுள்ளமை குறிப்பிடத் தக்கது.

## 350 மில்.அமெ டொலரில் சூதாட்ட விடுதி



பசுபிக் பிராந்தியத்தின் சூதாட்ட மன்னன் என அழைக்கப்படும் ஜேம்ஸ் பாக்கர் அவரது மிகப் பிரபல்யமான சூதாட்ட நிறுவனமான குரோன் உல்லாசப் பயண நிறுவனத்தின் ஊடாக இலங்கையில் சுமார் 350 மில்லியன் அமெரிக்க டொலர்களை முதலிடத் திட்டமிட்டுள்ளதாக அவுஸ்திரேலிய இணையத்தளமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இம் முதலீட்டுத் திட்டத்தின் ஊடாக 400 அறைகளைக் கொண்ட பாரிய உல்லாச விடுதியொன்றை கொழும்பில் அமைக்கவுள்ளது. இவ்விடுதியிலேயே சூதாட்டக் களியாட்டக் கழகத்தையும் அந் நிறுவனம் அமைக்கவுள்ளது.

இதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியுள்ளதாக முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் அதிகாரியொருவர் ஏ.எவ்.பி. செய்திச் சேவைக்குத் தெரிவித்துள்ளதாக அவ் விணையத்தளம் மேலும் செய்தி வெளியிட்டுள்ளது.

50 வருட குத்தகைக்கு பெர ஏரிக்கு அருகில் நிலமொன்றை குரோன் நிறுவனம் பெற்றுக்கொண்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

## ஸ்கைப் காதலால் முறையற்ற புணர்வுக்குள்ளான பெண்கள் அவதி




பெண்களை கணினித் தொடர்பாடல் (ஸ்கைப்) மூலம் வளைத்துப் பிடித்து பாலியல் சுகத்தை அனுபவித்துப் பின் பலாத்காரத்தையும் அவர்கள் மீது பிரயோகித்த விரிவுரையாளர் ஒருவர் காவல்துறையின் கைகளுள் விழுந்துள்ளார்.

இறுதியாக இளம் ஆசிரியை ஒருவரும் இவரது வலையில் வீழந்த போதே விடயம் வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

பிரபல்யமான பாடசாலையொன்றில் பணியாற்றும் இவ் ஆசிரியை தனது நிலை தொடர்பாக கணினிக் குற்றத்தடுப்புப் பிரிவிற்கு மேற்கொண்ட முறைப்பாட்டை அடுத்து சந்தேக நபர் கைதாகியுள்ளார்.

சுவிஸ்லாந்துப் பல்கலைக் கழகம் ஒன்றில் பேராசிரியராகப் பணியாற்றுவதாகத் தெரிவித்திருந்த இந் நபர் தனது வைத்திய மனைவியுடன் சுவீடனில் வசித்து வந்துள்ளார்.

ஆனால் இலங்கைக்குத் திரும்பிய கடந்த நான்கு வருடங்களாக இவர் பணக்கார இளைஞிகளைக் குறிவைத்துத் தனது பாலியல் வேட்டையை மேற்கொண்டுள்ளார்.

ஸ்கைப்பின் ஊடாக பெண்களை வளைத்து ஐந்து நட்சத்திர விடுதிகளுக்கு அழைத்துச் சென்று அவர்களை இரசகியமாகப் படம் பிடித்த பின்னரே இவரது வக்கிரத்தனம் வெளித்தெரிய ஆரம்பித்துள்ளது.

எடுக்கப்பட்ட சலனப் படங்களையும் ஒளிப்படங்களையும் வெளியே கசியவிடுவேன் எனப் பயமுறுத்தி அப் பெண்களை மிலேச்சத்தனமான பாலியல் உறவுகளுக்கு அவன் பயன்படுத்தி வந்துள்ளதும் தெரியவந்துள்ளது.

இவனது கைதின் பின்னர் பாதிக்கப்பட்ட இளைஞிகள் பலர் தமது முறைப்பாடுகளையும் பதிவு செய்துள்ளனர்.

## இலங்கைக்குள் இந்திய தலையீடு ஒரு அச்சுறுத்தலே – பொதுபலசேனா

இலங்கையின் உள்வீட்டு விவகாரங்களில் இந்தியத் தலையீட்டை வன்மையாகக் கண்டிப்பதாக பொதுபலசேனா தெரிவித்துள்ளது. இந்தியா இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடாமல் விலகியிருக்க வேண்டும் எனவும் அவ்வமைப்பு எச்சரித்துள்ளது.

இதனை வலியுறுத்தி இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகத்திற்கு பொதுபலசேனா மகஜர் ஒன்றையும் கையளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இதற்காக சுமார் 1000 பிக்குகள் இந்தியத் தூதரகம் நோக்கி நடைபயின்றதாகவும் தெரிவித்த பொதுபல சேனாவின் செயலர் ஞானசார தேரர் இந்தியத் தலையீடானது இலங்கையின் இறையாண்மைக்கு எப்போதும் அச்சுறுத்தலாகவே இருக்கின்றது எனவும் இலங்கையின் உள்நாட்டுப் போர் ஆரம்பித்ததற்கு இந்தியா பயங்கரவாதிகளுக்கு செய்த ஆயுத மற்றும் நிதி உதவியே இலங்கையைக் கடந்த 30 வருடங்களாக அழித்தது என்றும் தெரிவித்தார்.

## மேலதிக வட்டியைக் காசாகக் கொடுக்கும் நிதிக்கம்பனிகள்

இலங்கை மத்திய வங்கியால் முதலீட்டுக்கு வழங்கப்படவேண்டிய அதிகூடிய வட்டி வீதமாக 14.45 வீதமாக இருக்க பல நிதிக்கம்பனிகள் 15 தொடக்கம் 18 வீதம் வரைக்கும் வட்டி வழங்க முன்வருவதாக இணையத்தளச் செய்தியொன்று தெரிவிக்கின்றது.

இம் மேலதிக வட்டியினை வைப்புச் சான்றிதழில் குறிப்பிடாமல் காசாக கையில் வழங்கத் தயாராயிருப்பதாக அந் நிதிக் கம்பனிகள் வைப்பாளர்களிடம் தெரிவித்திருப்பதாகவும் அவ் விணையத்தளம் தெரிவிக்கின்றது.

இவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட வட்டியை விட அதிகூடிய வட்டியை வழங்க முன்வருவதும் அதனைக் காசாக வழங்க முன்வருவதும் மத்திய வங்கியின் ஆணைக்குப் புறம்பானதென முதலீட்டு ஆலோசகர்கள் தெரிவிக்கின்றனர்.

## சுதந்திர ஊடகத்தை மரணிக்க நான் விடமாட்டேன் – ரணில் சூழுரை



இலங்கையில் நிலவும் எதேச்சாதிகாரப் போக்கினால் சுதந்திர ஊடகத்தை மரணிக்க விடப் போவதில்லை என்று எதிர்கட்சித்தலைவர் ரணில் விக்ரமசிங்க சூழுரைத்துள்ளார்.

நெருக்கடிக்குள்ளாகியுள்ள சுதந்திர ஊடகத்துறையானது புதிய ஊடக ஒழுக்க நெறியால் கொல்லப்படப் போவதாக அவர் தெரிவித்தார். அதனை தாம் ஒரு போதும் அனுமதிக்கப் போவதில்லை எனக் குறிப்பிட்ட அவர் இவ் விடயம் தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து சகல ஊடகத்துறை அமைப்புக்களுடனும் தாம் இவ்வாரம் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ள இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

கொழும்பில் நடந்த கலந்துரையாடல் ஒன்றில் தனது இக்கருத்துக்களை வெளியட்ட அவர் ஊடக ஒழுக்க நெறி தொடர்பாகப் புள்ளி விபரக் கருத்துக்களை வெளியிட்டதுடன் அழுத்தங்களுக்கு எதிராக கட்டாயமாக எதிர் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

## தன்னைத் தானே சுட்டுக்கொண்டார் துமிந்த சில்வா – காவல்துறைக் காவலர் சாட்சியம்



சனாதிபதியின் தொழிற்சங்க ஆலோசகர் பாரத லக்ஸ்மன் படுகொலைக்கான நீதிமன்ற விசாரணைகளின் போது சாட்சியமளித்த காவல்துறைக் காவலர் ஒருவர் " பாரத லக்ஸ்மனை துமிந்த சுட்டுவிட்டுப் பின் தன்னைத் தானே சுட்டுக் கொண்டதாக அங்கிருந்த மக்கள் கதைத்ததாக" தெரிவித்தார்.

விசேட அதிரடிப்படைக் காவலரான அவர் தெரிவித்ததாவது: நான் சம்பவம் இடம்பெற்ற தினம் ராஹுல வித்தியாலயத்தில் காவல் பணியில் இருந்தேன். அப்போது பலர் கைத்துப்பாக்கிகள் மற்றும் இயந்திரத் துப்பாக்கிகள் சகிதம் அங்கிருந்தார்கள். டிபெண்டர் ரக வாகனமொன்றில் வந்திறங்கினார் துமிந்த சில்வா. அதைத் தொடர்ந்து குழுமியிருந்த மக்கள் மீது தாக்குதல்களும் இடம் பெற்றன. பின்னர் வெடிச்சத்தங்கள் கேட்டன. அதன் பின்னர் மக்கள் இவ்வாறு பேசிக் கொண்டார்கள் எனத் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சிறுகதை*

# வரம்!..

*மைக்கல் கொலின்*

அந்த கானகத்தின் ஒற்றையடிப் பாதையின் நடுவே ஒரு கல். அது மனதின் சறுக்கல், வாழ்க்கை தந்த வழுக்கல். மாமுனியின் கோபக்கிறுக்கல் அதுவே சாப கருங்கல்லாக்கியது.

ஒன்றல்ல இரண்டல்ல.. கிட்டத்தட்ட பன்னிரண்டு வருடங்களாய் அந்த கல் அந்த பாதையில் தான் தவம் கிடக்கின்றது. இயற்கையின் எழில் கொஞ்சி விளையாடும் அந்த அழகிய கானகப் பிரதேசம் பல வருட காலமாக பாழடைந்த நிலையில் ஏதோ ஒரு சோகம் சொல்லியது.

தூரத்தே தெரியும் ஒரு குடிசை. முனிவர்கள் தங்கும் ஆசிரமத்தை போல் அழகாக வேயப்பட்டிருந்தாலும் இன்றைய அதன் தோற்றம் மோசமாகவே இருந்தது. சூரியன் விழித்து தன் கதிர்களை பரப்ப முன்னமே தன் விழிக் கமலம் திறந்து தன் கணவனுக்கு வேண்டிய கடமைகளை செய்து அவரது இறை வணக்கத்திற்கான ஒழுங்குகளை செய்து, ஆற்றங்கரையில் தண்ணீர் கொண்டு வர அன்ன நடை நடந்து செல்லும் அந்த அழகிய பாதங்களின் அசைவுகளின் போது கேட்கும் அந்த சலங்கைகளின் சத்தம்... காலை நேரத்து புள்ளினங்களின் இனிய கானத்துடன் சேர்த்து ஒரு ரம்மியமான சூழலை உருவாக்கும் நிலை இன்றில்லை.

ஆற்றுக்குள் இறங்கி தன் ஆடை களைந்து அவள் நீராடும் அழகைக் பார்க்க... இல்லை இல்லை அவள் மேனி அழகை ரசிக்க ஆற்றங்கரை ஓரத்திற்கு மேய வரும் புள்ளி மான்களும், கவரி மான்களும், அவள் நீராடி தான் கொண்டு வந்த மண் குடத்தில் தண்ணீர் அள்ளிச் செல்லும் வரை அவளுக்கு துணையாக நிற்கும். வானத்து மின்னல் ஒன்று மாநதியில் இறங்கியது போல் அவள் நீராடிச் செல்வாள்.

அந்த கானகத்து மான்களைப் போலவே அவள் அழகை அவளுக்கும் தெரியாமல் அவனும் ரசித்தான்.

பனிமூட்டம் நிரம்பிய அந்த விடியற் காலைப் பொழுதில் வானத்து நிலவு மண்ணில் உலா வருவதைப் போல் அந்த மஞ்சள் மேனி அழகி. ஆம்.. அவள் தான் அகலிகைப் பெண். தினமும் நீராடும் வேளை இந்திரலோகத்து அதிபதி சித்தம் கலங்கி நின்றான்.

மேனகை. ரம்பை. ஊர்வசி, திலோத்தமை என்று அழகிகள் கூட்டம் அவன் அந்தப்புரத்தை அழகு செய்தாலும் அழகு மயிலால் அகலிகையின் உடல் வனப்பும். மேனியழகும் அவனை சித்தம் தடுமாற வைத்தது.

ஒரு நாளேனும் ஒரு பொழுதேனும் அவளுடன் கலந்திட வேண்டும் என்ற வெறி அவனுள் கிளர்ந்தெழுந்து நீறு பூத்த நெருப்பாய் கனன்று கொண்டு இருந்தது.

இது இன்றல்ல நேற்றல்ல தேவலோக அழகுச் சந்தையில் என்று அகலிகையை அவளது தந்தை பந்தயப் பொருளாய் ஆக்கினானோ அன்றிலிருந்து எழுந்தது அந்த தீ.

தந்திரக் கௌதமன் பந்தயத்தில் வென்று அகலிகையை பூமிக்கு கொண்டு வந்த நாள் முதல் அந்த தீ மேலும் மேலும் பற்றியெரியத் தொடங்கியது. அவனைக் கண்ட நாள் முதல் விரகத்தின் தாபத்தில் தினமும் துடித்திருந்தான் இந்திரன்.

அவள் ஒரு ரிஷி பத்தினியாய் மாறிப் போனாலும் காட்டில் எரித்த நிலவாய், கடலில் கரைத்த உப்பாய் அவள் இளமை முதுமையை தாலாட்டும் நிலையில்..

அவள் கணவன் கௌதம முனியின் காலடியில் கொட்டிக் கிடப்பது. அவனுக்கு வேதனை அளித்தது. தேனைப் பருகியவனுக்கு தானே தேனின் சுவை தெரியும். எத்தனை வகை தேனை ருசி பார்த்தவன் இந்திரன். இது கொம்புத் தேனல்லவா..?

அதன் சுவை அறிய அவன் மனம் துடித்தது. ரிஷி பத்தினி தான் என்றாலும் அவள் இளமை அவள் அழகு, அவன் சிந்தனையை மயக்கியது. நேரம் பார்த்து இருந்தவனுக்கு காலம் கூடி வர பொறுமை இருக்கவில்லை.

விடியற் காலை எழுந்து தன் கடமை முடிக்க ஆற்றங்கரை செல்லும் மாமுனியின் பழக்கம் அவர் தம் வழக்கமாக இருப்பதை அறிந்தான்.

அன்று சித்திரா பௌர்ணமி வானில் வெண்ணிலவு பவனி வர தொடங்கி நாழிகைகள் ஆகிக்கொண்டிருந்தது. எங்கிருந்தோ ஒரு சேவல் கூவியது. சேவல் வடிவில் வந்து கூவியது இந்திரன். முற்றும் துறந்த முனிவர் எழுந்தார் தன் அருகில் துயிலும் அகலிகையை பார்த்தார்.

மேலாடை விலகிப் படுத்திருக்கும் அவள் உடலழகு அவனை கிறங்கச் செய்தது. அந்த அழகிய உடல் தன் சொந்தம் என்ற பெருமித உணர்வுடன் அவள் மேல் தன் போர்வையை போர்த்திவிட்டு எழுந்து தன் கமண்டலத்தை எடுத்துக் கொண்டு ஆற்றங்கரை நோக்கி நடக்கத் தொடங்கினார்.

அது அர்த்த ஜாமநேரம். ஆனால் விடிகாலைப் பொழுதைப் போல் நிலவு வெளிச்சம். சேவலைப் போல் கூவி கௌதமனை ஏமாற்றிய இந்திரன் கௌதம வேடம் பூண்டு ஆசிரமத்துக்குள் நுழைந்தான்.

வாசல் நிலை அவன் நெற்றிப் பொட்டில் இடித்தது. "அம்மா" என்று அவன் நெற்றியைத் தடவியபடி உள் நுழைந்தான். விட்டு விட்டு எரிந்து கொண்டிருந்த அந்த தூண்டாமணி விளக்கை மெல்ல ஊதி அணைத்தான். எங்கும் இருள் போர்வை.

அகலிகையை நெருங்கி அவள் தோள் தொட்டு திருப்பினான். அந்த ஸ்பரிசம் பட்ட கணத்தில் அவள் மேனி துடித்தது. நீண்ட நாள் தவம் கலைந்து தன் கணவன் தன்னை தீண்டுகிறான் என்ற நினைப்பு. வந்த ஸ்பரிசம் அவளுக்கு புதிதாய் இருந்தாலும் எத்தனையோ ஆண்டுகளுக்கு பின்னான தீண்டுதல் அது. அதனை இழக்க அவள் தயாராக இல்லை. அதன் பின்பு அங்கு நடந்தது மாபெரும் யுத்தம். ஒருவரை ஒருவர் வெற்றி கொள்வதல்ல ஒருவரிடம் ஒருவர் தோல்வியடைவதை முன்னிலைப் படுத்தி ஆரம்பிக்கும் யுத்தம். இத்தனை நாள் தவம் கலைந்து அவள் தன்னுள்ளே உருகினாள். இந்த சுகம் இனிமேல் எப்போது? ஓ.. இது தான் என்ன சுவை..? அந்த காட்டுத் தேனைப் பருகிய மயக்கத்தில் அந்த இந்திர வண்டு களைத்துப் போய் படுத்துக் கிடந்தது.

வாசலில் யாரோ வரும் அரவம். கௌதம மாமுனி உள்ளே நுழைந்தார். தன் மஞ்சத்தில் இன்னுமொரு கௌதமரா? அவரது ஞானதிருஷ்டி அவனை இந்திரனாய் அடையாளம் கண்டது. பாவம் அகலிகை.. அசல் எது? நகல் எது? என தெரியாமல் விழித்தாள். அசலைக் கண்டதும் நகல் ஒழி மறைந்தது.

அகலிகையின் கோலம் அங்கு என்ன நடந்தது என்பதை சொன்னது.

முறைதவறி மாற்றானோடு இன்பம் கொண்டவளே பிடிசாபம். இன்று முதல் நீ உணர்ச்சியே அல்லாத ஜடம். ஆம் இனிமேல் நீ ஒரு கல். வெறும் பாறை...

சாபம் இட்ட முனி வீதியில் இறங்கி நடக்கத் தொடங்கினார். திகைத்தாள் அகலிகை. இவ்வளவு நேரமும் தன்னுடன் இன்பம் அனுபவித்தவன் தன் கணவனில்லையா? இந்திரனா? இந்திரனுடனா நான் காம சுகம் கண்டேன்.

இத்தனை நாள் இல்லறத்தில் இறைவா..? இதென்ன சோதனை? முக்காலமும் அறிந்த முனிவரே.. வெறும் சேவல் கூவும் சத்தத்தில் நிகழ்காலம் அறியாது போனது... குற்றமல்ல.. ஆனால் கணவனைப் போல் உருமாறி வந்த இந்திரனை பேதை நான் அடையாளம் காணாதது எனது பிழையோ..? கேட்க வாய் துடித்தது. ஆணாதிக்கத்தின் பிரதி விம்பமாய் செல்லும் கௌதமனை நோக்கி வாசலைத் தாண்டி வீதிக்கு ஓடியவள் கல்லானாள்.

இது அன்று நடந்தது.



இனி இன்று நடப்பது தொடர்கிறது.

அந்த கானகத்தே வீதி வழியே மூவரின் வருகை. ஆளரவம் அற்றிருந்த அந்த பிரதேசம் ஒரு புதிய வரவிற்கு கட்டியம் கூறியது. காலடிச் சத்தம் எதிரொலிக்க எதிரொலிக்க.. அந்த பாறையின் நரம்புக்கள் உயிர்த் துடித்தது.

தன் தந்தை சொல்லை சிரமேற் கொண்டு வனவாசம் சென்றிருந்த மிதிலையின் மைந்தன், கோசலையின் புதல்வன் ஸ்ரீ இராம பிரான் தன் ரிஷி பத்தினியுடனும், தன் தம்பி இலக்குமனுடனும், அப் பாதை வழியே வந்தான்.

பாறை மேல் பட்டது இராமரது பாத தூசி. உடனே வெட்டி எழுந்தது அகலிகை எனும் மின்னல் ஊசி. பாதங்கள் பட்டதா...? இல்லை பட வைக்கப்பட்டதா..? இது விதி. இராமனின் கால் பட்டு அகலிகை மீண்டும் பெண்ணாக வேண்டும் என்பது விதி. எல்லாமே விதிப்படியே நடந்தது,

தனக்கு விமோசனம் தந்த் பாதக் கமலங்களில் விழுந்து வணங்கினாள் அகலிகை. "அம்மா" என்றழைத்தான் இராமன். உள்ளம் அறியாது. உடல் செய்த குற்றம் குற்றமல்ல என்று நம்பிய இராமன் அவளை "அம்மா" என்றழைத்து உலகுக்குக் காட்டினான்.

காலம் மனிதனை மாற்றுகின்றது. ஆம் தான் கொடுத்த சாபம் தன்னையே சபித்ததை உணர்ந்தான் கௌதமன். தனிமை அவனை வாட்டியது. பூசை புனஸ்காரம் முதல் ஆகாரம் செய்வது வரை பார்த்துப் பார்த்து செய்வாளே... அகலிகை இப்போ அவளில்லா தனிமை. .. அது மிகப் பெரும் கொடுமை. தன் நிலை உணர்ந்தான் கௌதமன். காலம் கனிவது அவனுக்குத் தெரிந்தது. முக்காலமும் உணர்ந்த முனிவனல்லவா அவன்.

கௌதமன் மீண்டும் அங்கு வந்தான். வந்தவன் கண்டான். இராமனின் காலில் விழுந்து எழும் தன் பத்தினி அகலிகையை இராமன் "அம்மா" என்று அழைத்தது கௌதமனின் காதிலும் விழுந்தது. பக்கத்தில் நிற்கும் சீதையை பார்க்க அவனுக்கு பாவமாக இருந்தது. பூமி விழுங்கப் போகும் பெண்ணல்லவா அவள்?. தன் பத்தினியின் சாபம் போக்கிய இராமன் தன் மனைவிக்குச் செய்யப்போகும் கொடுமை அக்கினிப் பிரவேசம் என்பது அவன் கண்களில் தெரிந்தது. சிரித்துக் கொண்டான். தான் கல்லாக்கியது மட்டுமே. ஆனால் இராமன் வனாந்தரத்தில் அல்லவா அலைய விடப் போகிறான் தன் பத்தினியை என்பதை சொல்ல முடியுமா..? அகலிகையை பார்க்க அவனுக்கு பாவமாக இருந்தது.

என்ன இருந்தாலும் தன் ரிஷி பத்தினியல்லவா?

இந்திரன் செய்த தவறுக்கு அவளைத் தண்டித்தது. என்ன நியாயம்? இந்திரனையல்லவா தண்டித்திருக்க வேண்டும்..? அவன் இப்போதும் எத்தனை அகலிகைகளின் வாழ்க்கையோடு விளையாடிக் கொண்டிருப்பானோ?

ஆனால் அவன் ஆண் மகன்.

"அகலிகை"

கௌதம முனிவர் மெல்ல அழைத்தார்.

இராமனும்., சீதையும், இலக்குமணனும். போகும் பாதையை பார்த்துக் கொண்டிருந்த அகலிகை திரும்பிப் பார்த்தாள். நீண்ட நெடுநாட்களுக்குப் பின் தன் கணவனின் அழைப்பு.

"அகலிகை உனக்கு ஒரு வரம் தருகின்றேன். உனக்கு என்ன வேண்டுமோ கேள்" இவ்வளவு காலமும் என் சாபத்தால் கல்லாகிப் பட்ட துன்பம் போதும்.. அன்போடு சொன்னார் கௌதமர்.

அவர் அருகில் வந்து அவரது பாதங்களில் வீழ்ந்து வணங்கியவள் எழுந்து பார்த்தாள். பழைய ஞாபகங்கள் வந்தன.

அவள் மெல்ல வாயசைத்து தனக்கான வரத்தைக் கேட்டாள்.

"நாதா. நீங்கள் ஒருமுறை இந்திரன் வேடம் கொண்டு என்னோடு வந்து சுகித்திருக்க வேண்டும்..."

அந்த கானகத்தின் ஒற்றையடிப் பாதையின் நடுவே இப்போது இரண்டு கற்கள் கிடந்தன..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாய்மை



அம்மா என்று அழைத்தபடி
வாசலில் நின்றான்
பிச்சைக்காரப் பையன்

வேலையில்
மூழ்கியிருந்த அவள்
திடுக்குற்று திரும்பினாள்

பிள்ளை செல்வம்
இல்லாத
அப்பெண்ணின்
காதுகளில்
தேன் பாச்சியது
அந்த அம்மா என்ற
ஒரு வார்த்தை.

*சஜித் - 9ஈ*
*கோணேஸ்வரா இந்துக்கல்லூரி*
*திருகோணமலை*

## தோழி....



உன் விரல் பிடிச் சோடி
நீ ஊட்டிவிட
நான் பசியாய் இருக்கிறேன்
தோழி....



தனிமையில் நான் நடக்க
என்னோடு என் நிழலாய்
நீ வர, நேரம் பயணம்
உன்நினைவுகளோடு தான்
தோழி....

காற்று என்னுடன்
சண்டைபிடிக்கிறது
சுவாசிப்பது என்னை,
நேசிப்பது அவளையா என்று
தோழி....

பாவம் அதற்கு தெரியவில்லை
நான் சுவாசிப்பதும்
நான் நேசிப்பதும்
உன்னைத்தான் என்று......

*இ. மாதுரி..*

## வரும்!

ஈச்சந்தீவு ஊரிலே என்னதான்
நடக்குதோ?
வாச்சுப்போச்சுதாமோ ஊர்
வம்புக்காரருக்குமோ?
வீச்சுக்காரர் இரவிலே வீசவருதல்
உண்டுமோ?
காச்சிவிற்றல் உண்டுமோ,
காசும்வந்து சேருமோ?

அலுவலகக்கட்டிடம் ஆருமில்லை
என்பதால்
கலகலப்பில் போகுதோ, கண்ணும்
கண்ணும் மோதுதோ?
விலகியோரும் மேலிடம் மீதிருந்து
பார்ப்பரோ?
உலவும்போதில் காப்பினர்
ஓடித்தாவக்கூடுமோ?

கேட்கப்பார்க்கக் கூடியே கிளர்ச்சி
செய்ய யாருமே
ஆட்கள் அங்கு இல்லையோ -
அரசகாப்பும் இல்லையோ?
நாக்குத்தெறிக்க மூத்தவர்
நாலுவார்த்வை கேட்பரேல்
தூக்குப்போட்டுச்சாகவே
சொல்லிடாமல் போகலாம்?

முழக்கமிட்டுப்பரப்பிட 'முரசு'மொன்று
உள்ளதை
வழக்கமாக நெஞ்சிலே
வைத்திருத்தல் வேண்டுமாம்!
இளக்கமாக எண்ணினால்
இரவுபோகும் பகல் வரும்!
விளக்கத்தேவை இல்லையாம்,
விட்டுவிலகல் நல்லதாம்!

*மின்னல்*

*ஈச்சந்தீவில் கைவிடப்பட்ட கட்டிடம் தொடர்பாக கடந்தவார முரசில் வெளியான செய்தியைத் தொடர்ந்து ஈச்சந்தீவின் மைந்தன் ஒருவரால் எழுதப்பட்ட கவிதை.*




## இமை இடுக்குகளில் கண்ணீர் துளிகள்



*பத்திரமாய்க் காத்த*
*வாசல் பூக்களாய்*
*புன்னகை சேர்த்த*
*சித்திரமாய் உன்னை*
*இலக்கு ரகசியமாய்*
*முத்து முத்தாய்*
*வார்த்தைகளில் வந்த*
*சொல்லு மணி*
*நெல்லு மணியாய்*
*காத்துக் காப்பாற்றிய*
*அதன் இலக்கை*
*நிறைவு செய்ய*
*ஆசை கொண்ட*
*மாமாவும் மாமியும்*
*மனதில் ஆட்டிய*
*தாலாட்டு*
*உனக்கு*
*வாழ்த்து மடலாய்ச் சேர*
*கனவின் கவிதை*
*மனதில் பூட்டப்பட்ட*
*ஒரு நம்பிக்கை*
*கல்வி எனும்*
*புத்தகத்தில்*
*பட்டம் பெறும்*
*அது*
*பட்டுப்போகாது*
*மகள் என்ற சொல்லுக்கு*
*நல்ல பெயர் எடுக்க*
*பாடசாலையில் பாராட்டும்*
*பரிசும் கிடைக்க*
*காத்திருந்தார்கள் பைங்கிளியே*
*பயணம் வந்ததே*
*எப்போது உனக்கு*
*பரிதாபமாய் அவர்கள்*
*இமை இடுக்குகளில்*
*கண்ணீர் துளிகளை*
*சொந்தமாக்கியே உன்னை*
*விடை பெற்றுச் சென்றார்கள்*
*பெண்ணே உனை*
*இந்த வரிக் கவிதை*
*எல்லோருக்கும்*
*மனதில் முளையெடுக்க*
*ஓர் பதிலாக அமையட்டும்.*

ஜே.எம். முஸம்மில். - நிலாவெளி

## காலை நேரம்



வளைந்து பார்க்கும்
வானம் - கீழ்த்திசையில்
சிவத்து மின்னுகிறதே!
பொற்பந்தாம் சூரியனின்
கிரகப்பிரவேசமோ?
துளைகளின் ஆக்ரோஷம்
சூரியனைத் தழுவிடவோ?
பறவைகளின் குரலொலிகள்
பாமலை ஆனதுவோ?
மரங்களின் அசைவுகளை
சாமரங்கள் என்பதுவோ?
இயற்கை அழைக்கிறது மானிடா
எழுந்து வா
சுத்தமான காற்றை சுவாசி
மனதுக்குள் மலையமாருதம்
மானசீகமாய் உணர்ந்துகொள்.

ஜெ. துவாரகா - 9பீ
புனித மரியாள் கல்லூரி
திருகோணமலை.




# இலங்கை வரலாற்றில் கம்பளைக் கால கலைக்கோயில் "எம்பெக்க"



தேவாலயத்தின் அமைப்பு

பிரதான தேவாலயம் ஐந்து வேறு வேறான கட்டிடங்களை உள்ளடக்கியதாக அமைக்கப்பட்டுள்ளது. அவையாவன:

1. பெர வாத்தியக்கார மண்டபம்
2. சந்தனக் கூடம்
3. இடைக்கூடம் அல்லது மத்திய கூடம்
4. பிரித் ஓதும் பண்டபம்
5. கர்ப்பக்கிருகம் அல்லது பிரதிஷ்டா மாளிகை

பெர வாத்தியக்கார மண்டபம் என்றழைக்கப்படும் முன் மண்டபம் சற்று நீண்டதும் அகலமானதுமாகும். இதன் நீளமான பக்கத்தில் ஆறு தூண்களும், அகலமான பக்கத்தில் நான்கு தூண்களும் கூரையைத் தாங்கி நிற்கின்றன.

அதனைத் தவிர உட்புறம் நான்கு பக்கத்திலும் வரிசையாக மொத்தம் 32 தூண்கள் மேலும் கூரையைத் தாங்கி நிற்கின்றன. கூரையைத் தாங்கும் தூண்களுக்கும் கூரைக்கும் இடையில் இணைப்புப் பாலங்களாக சமாந்தரங்களாக இடது புறமாகவும் வலது புறமாகவும் 7 ஜோடித் தூண்கள் கிடையாகப் பொருத்தப்பட்டுள்ளன.

கூரையில் அகலவாக்கில் 12 பராலைகளும், நீளவாக்கில் 66 பராலைகளும் பொருத்தப்பட்டுள்ளன.

இவற்றைத் தவிர கூரையின் இறங்கு பிரதேசத்தைப் பிரித்து அவற்றில் இரு புறமும் நீளவாக்கில் 41 பராலைகளும், அகலவாக்கில் 12 பராலைகளும் பொருத்தப்பட்டுள்ளன. இந்தப் பாராலைகள் அனைத்தும் கூரையின் உச்சியில் இருந்து நாலாபுறமும் விரிந்து, ஒரு குடையை விரித்து வைத்த மாதிரி கூரையைத் தாங்கி நிற்கும் கிடையான தூண்களின் மேல் இறுக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் கூரையின் உச்சியில் "குருப்பாவை" என்றழைக்கப்படும் உத்தரத்தில் பிணைக்கப்பட்டிருக்கும். கலை அம்சம் கொண்ட பூமடலுடன் செதுக்கப்பட்டுள்ள இத்தகைய "குருப்பாவை" யுடன் சிறிய உத்தரத் தூண் வேறு எங்குமே கிடையாது என்று சொல்லப்படுகின்றது. ஆதலால் இதனை எம்பெக்க தேவாலயத்துக்கு மட்டுமே உரித்தான விசேட கலை சிருஷ்டியாகக் கருதப்படுகின்றது. அதன் மற்றுமொரு சிறப்பம்சம் எந்த விதமான இரும்பு ஆணி வகைகளும் பாவிக்கப்படாமல் முற்றிலும் மரப் பொறிமுறை வேலைப்பாடுகள் மட்டுமே கொண்டு முழுக் கூரையும் அமைக்கப்பட்டுள்ளமையாகும்.

மரச் சிற்பக்கலை உயர் கலைநுட்பங்கள் தேவாலயமெங்கும் கலை நுணுக்கங்கள் பொங்கிப் பிரவகித்துக் கிடந்தாலும் பெர வாத்தியக்கார மண்டபம் என்றழைக்கப்படும் முன் மண்டபமே கலைச் சிருஷ்டியின் அச்சாணியாகத் திகழ்கின்றது. முன் சொன்னபடி இம்மண்டபத்தில் காணப்படுகின்ற கலை நுணுக்க வேலைப்பாடுகளை பின்வருமாறு பிரிக்கலாம்.



*ஒரு தூணில் 4 என 32 தூண்களில் காணப்படும் மரச் சித்திர செதுக்கல்கள் 128, ஒரு தூணில் 8 என 32 தூண்களில் காணப்படும் சீவல் மர செதுக்கல்கள் 256, தூண் உச்சியில் செதுக்கப்பட்டுள்ள அலங்கார தாமரை மலர் வடிவங்கள் 64, உத்தரத் தூண் மரச் சித்திர செதுக்கல்கள் 30, உத்தர கிடைத் தூண் மரச் சித்திர செதுக்கல்கள் 36*

மொத்தம் 514

மேற்படி எல்லா தூண்களும் இந்தியாவின் கேரளத்தில் இருந்து தருவிக்கப்பட்ட நன்கு முற்றிய வேங்கை மரங்களில் இருந்து குடைந்தெடுக்கப்பட்டுள்ளன என்று கூறப்படுகின்றது. இச்சித்திர வேலைப்பாடுகளை உருவாக்குவதற்கு தலைமைச் சிற்பியாகச் செயற்பட்டவர் தெல்மட தேவேந்திர மூலாச்சாரியார் என்றும், இவர் விஜயநகர சாம்ராஜ்யத்தின் இறுதிப் பகுதியில் இலங்கைக்குப் புலம்பெயர்ந்தவர் என்றும், அவரது தலைமையின் கீழ் நூற்றுக்கணக்கான சிற்பிகள் இத்தூண்களில் மரச் சித்திர வேலைப்பாடுகளை செய்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(இன்னும் நடுவோம்)

செந்தூரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு

## "அம்பிகாபதி" ஒரு பார்வை





7/10

உத்தரபிரதேச மாநிலம் பனாரஸ் தான் கதைக்களம். கோவில் புரோகிதரின் மகன் தனுஷ். கல்லூரி பேராசிரியரின் மகள் சோனம் கபூர் சிறு வயதிலிருந்து சோனம் கபூர் மீது தனுஷுக்கு ஒரு விதமான ஈர்ப்பு இருந்து வருகிறது. அது இளம்பருவத்தை அடைந்ததும் காதலாக மாறுகிறது. சோனம் கபூரும் தனுஷ் மீது காதலில் விழுகிறார்.

இந்நிலையில் மேல்படிப்புக்காக டெல்லிக்கு செல்கிறார் சோனம் கபூர். பிறகு ஒருவருடம் கழித்து இருவரும் சந்திக்கும்போது தனுஷ் மீதான காதலை வெறும் ஈர்ப்புதான் என்று கூறி மறுக்கிறார். இதனால் மனமுடையும் தனுஷ் சோனம் கபூருடனான நட்பை விடாமல் தொடர்ந்து பழகி வருகிறார்.

இந்நிலையில் சோனம் கபூரின் விருப்பமின்றி அவருடைய பெற்றோர் அவருக்கு திருமணம் செய்து வைக்க முடிவெடுக்கிறார்கள். இந்த திருமணத்தை நிறுத்த தனுஷ் உதவி செய்கிறார். இதையடுத்து தானும், அபேதியோலும் காதலிப்பதாக தனுஷிடம் சோனம் கபூர் சொல்கிறார். இதனால் வெறுப்படைகிறார் தனுஷ். இதன்பின் தனுஷ் காதல் என்னவாயிற்று? அபேதியோல், சோனம் கபூர் காதல் என்னவாயிற்று? என்பதே மீதிக்கதை.

விக்ரம், சூர்யா ஆகியோருக்கு பாலிவுட்டில் கிடைக்காத மிகப்பெரிய அறிமுகம் தனுஷிற்கு கிடைத்தள்ளது. நேர்த்தியான கதைக்களத்தை தனது அசாத்தியமான நடிப்பால் பாலிவுட்டில் நிரந்தர இடத்தை தனுஷ் பிடித்துள்ளார் என்றால் அது மிகையல்ல..

சோனம் கபூர் அழகு பதுமையாய் வலம் வருகிறார். இவர் காதல் பண்ணுவது மட்டுமல்லாமல் அரசியல் மீதும், முரண்பட்ட சிந்தனைகள் மீதும் பற்று கொண்டவராகவும் களத்தில் தடம் பதித்திருக்கிறார். பள்ளி காலத்து பெண்ணாக வருவதாகட்டும், இளம்பருவத்தில் சுடிதாரில் வலம் வருவதிலும் நம்மை கவர்கிறார். வித்தியாசமான கதாபாத்திரத்தில் அபே தியோல். இவருடைய கதாபாத்திரம் நம்மை ரொம்பவுமே ஈர்க்கிறது.

படம் முதல் பாதி முழுவதும் காதல், இசை என்று பயணிக்கிறது. இரண்டாம் பாதியில் அரசியலில் இறங்கி, தட்டுதடுமாறி எல்லையைக் கடக்கிறது. ஏ.ஆர்.ரஹ்மானின் இசையினாலும், நடிகர்களின் யதார்த்த நடிப்பாலும் படத்தை ரசிக்க முடிகிறது. வைரமுத்துவின் வரிகளில் ஏ.ஆர்.ரஹ்மான் இசையில் அமைந்துள்ள பாடல்கள் தாளம் போட வைக்கின்றன. பின்னணி இசையிலும் தனது திறமையை மீண்டும் மெய்ப்பித்திருக்கிறார்.

நவீன உடைகள் அணிந்து, உலக நாடுகளை சுற்றி பாட்டுப் பாடினால்தான் காதல் படம் என்று வரையறுக்கப்பட்ட பாலிவுட்டில், சாதாரண ஏழை குடும்பத்தைச் சேர்ந்த நாயகனும், எதற்கும் உணர்ச்சி வசப்படாமல் பொறுமையாக முடிவெடுக்கும் நாயகியையும் வைத்து அழகான காதல் படம் உருவாக்கலாம் என்று நிரூபித்திருக்கிறார் இயக்குனர் ஆனந்த் ராய். நட்ராஜ் சுப்பிரமணியத்தின் ஒளிப்பதிவில் ஹோலிப்பண்டிகை பாடலும், பனாரஸியா பாடலும் சபாஷ் போட வைக்கிறது.

*மொத்தத்தில் "அம்பிகாபதி" காதல் சின்னம்.*





எஸ்.ஜே. சூர்யா இயக்கி நடிக்கும் "இசை" படம், முழுக்க முழுக்க இளையராஜாவின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்டு வருகிறது. படத்தில் ஏ.ஆர்.ரஹ்மான் தோற்றத்தில் எஸ்.ஜே.சூர்யா நடித்திருந்தாலும், இளையராஜாவின் கதைதான் அது என அடித்துச் சொல்கிறார்கள் விவரம் அறிந்த சிலர். 'இசைஞானி' என்பதில் 'ஞானி'யைத் தூக்கிவிட்டு, 'இசை'யை மட்டும் பெயராக வைத்துள்ளாராம் எஸ்.ஜே.சூர்யா.

இளையராஜாவை கடவுளாக நினைத்து ரசிகர்கள் வணங்கியது, போஸ்டர் அடித்தது என இளையராஜாவைப் பற்றிய பல்வேறு சுவாரசியமான சம்பவங்கள் இந்தப் படத்தில் இருக்கிறதாம். ராமராஜன், மோகன் போன்ற அந்தக்கால ஹீரோக்களின் பெரும்பாலான படங்கள் ராஜாவின் இசைக்காகவே பல நாட்கள் ஓடின என்பதையும் காட்சிப்படுத்தி இருக்கிறாராம் எஸ்.ஜே. சூர்யா.

கவிஞர் வைரமுத்துவுக்கும், இளையராஜாவுக்கும் இடையே ஏற்பட்ட முரண்பாடுகள், மெல்லிசை மன்னர் எம்.எஸ்.வி.யுடன் இளையராஜாவுக்கு உள்ள உறவு போன்றவை கூட படத்தில் உண்டாம்.

ஒட்டுமொத்தமாக இளையராஜாவின் வாழ்க்கையை அன்று முதல் இன்று வரை அப்படியே பிரதிபலிக்கும் வகையில் படம் இருக்கும்மாம்.

## 5 கோடியுடன் அனுஷ்கா



தமிழ் தெலுங்கில் தயாராகும் "ருத்ரமாதேவி" படத்தில் நடிக்கும் அனுஷ்காவுக்கு இந்திய ரூபாய் 5 கோடிக்கு அசல் தங்க, வைர நகைகள் வாங்கப்பட்டு உள்ளது.

"ருத்ரமா தேவி" அரசியின் வரலாற்றை மையமாக வைத்து இப்படத்தை எடுக்கின்றனர். இதில் அனுஷ்கா ருத்ரமாதேவி ராணி கதாபாத்திரத்தில் வருகிறார். ராணா, பிரகாஷ் ராஜ் போன்றோரும் நடிக்கின்றனர். இந்திய ரூபா 40 கோடி செலவில் இப்படம் எடுக்கப்படுகிறது.

இப்படத்தில் நடிப்பதற்காக அனுஷ்கா குதிரையேற்றம் யானை சவாரி பயிற்சிகள் பெற்றார். வாள் சண்டையும் கற்றார். ஏற்கனவே "அருந்ததி" படத்தில் அரசி வேடத்தில் நடித்துள்ளார். எனவேதான் ''ருத்ரமாதேவி'' படவாய்ப்பு அவருக்கு கிட்டியது. முப்பரிமாணத்தில் (3D) இத்திரைப்படம் உருவாகிறது.

இப்படத்தில் அனுஷ்கா அணிந்து கொண்டு நடிப்பதற்காக அசல் தங்க, வைர நகைகளை விலைக்கு வாங்கியுள்ளனர். இந்திய ரூபா 5 கோடி மதிப்பிலான நகைகளை அணிந்து நடித்து வருகிறார். இதுவரை வேறு எந்த இந்திய மொழிப் படங்களுக்கும் படப்பிடிப்புக்காக இவ்வளவு செலவில் நகைகள் வாங்கப்பட்டது இல்லை. இந்த படத்துக்கு இளையராஜா இசையமைக்கிறார்.

■ ஒல்லி நடிகர் இந்திப் படம் வெற்றியடைந்த மகிழ்ச்சியில் குதிக்கிறாராம். ஒரே வாரத்தில் பெரிய நடிகர்களுக்கு இணையான வசூலை இப்படம் குவித்துள்ளதாம். இதன் மூலம் உலகளவில் நடிகரின் மார்க்கெட் விரிந்துள்ளதாம். இதனால் அவருக்கு படவாய்ப்புகள் குவிந்து வருகின்றனவாம்.. இனி இந்திப் படங்களுக்கு முன்னுரிமை அளிக்கவும் தமிழ் படங்களை குறைத்து கொள்ளவும் முடிவு செய்துள்ளாராம். மும்பையில் வீடும் பார்க்கிறாராம்.

■ விரல் வித்தை நடிகருக்கும், கண்ணாடி நடிகைக்கும் இடையேயான நெருக்கம் தற்போது இறுக்கமாகியுள்ளதாம். ஐதராபாத்தில் இருவரும் ரகசிய சந்திப்புகள் நடத்தி தங்களது காதலை வளர்த்து வருகிறார்களாம். விரல் வித்தை நடிகர் தனது தங்கை திருமணத்தை முடித்து விட்டு காதலியை கைபிடிக்கும் முடிவில் இருக்கிறாராம். இருவீட்டு பெற்றோரும் திருமணத்துக்கு சம்மதித்து விட்டதாகவும் நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

*கேள்விக்கு விடையளியுங்கள்... "சிங்கம் 2" இற்கான இலவச நுழைவுச்சீட்டை தனதாக்குங்கள்..*

**தங்கள் மாவட்டத்தில் உள்ள திரையரங்குகளுக்கான நுழைவுச்சீட்டுக்களை பெற்றுக்கொள்ளலாம்.**

*சிங்கம் 2 திரைப்படத்தின் இசையமைப்பாளர் யார்?*

**அதிர்ஷ்டசாலிகள் இருவர் குலுக்கள் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்**

விடையை இப்பிரசுரத்தின் பகுதியோடு இணைத்து ஆசிரியர் சினிமுரசு, 159ஏ இரண்டாம் மாடி, கடல்முகவீதி, திருகோணமலை. எனும் முகவரிக்கு அனுப்புக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுப் பையன்

## ட்விட்டர் உபயோகிப்பது எப்படி?

ட்விட்டர் பயன்படுத்துவது பேஸ்புக் பயன்படுத்துவதைக் காட்டிலும் எளிதானது. அதே சமயம் ஒரே வினாடியில் உலகிலுள்ள அனைவருக்கும் செய்தியைத் தெரிவிக்க வேண்டுமென்றால் அது ட்விட்டரால் மட்டுமே முடியும் வரும் காலங்களில் தொலைக்காட்சியைவிட அதிகமான மக்கள் செய்திகளைத் தெரிந்துகொள்ளும் இடமாக ட்விட்டர் மாற இருக்கிறது. இங்கு செய்தியாளர்கள் ட்விட்டர் உபயோகிப்பாளர்கள்தான். புரியவில்லையா? உதாரணமாக நீங்கள் உங்கள் வீட்டில் நிலநடுக்கம் உணருகிறீர்கள் அதை ட்விட்டரில் தெரிவிக்கும்போது உங்களைப் பின்தொடருபவர்கள் ரீட்வீட் செய்யும்போது அவர்களைப்பின் தொடரும் நண்பர்களுக்கு நொடியில் செய்தி சென்று சேரும். இப்படி ஒருசில வினாடிகளில் உங்கள் செய்தி உலகம் முழுவதும் தெரிந்துவிடும். மிகமிக முக்கியமான விடயம் ட்விட்டர் மிகவும் பாதுகாப்பானது. பேஸ்புக்கில் உங்களைப்பற்றிய விவரங்களைத் தவறாக உபயோகிக்க வாய்ப்பு மிக அதிகம்.




புகைப்படம் போன்றவற்றை தவறான செயல்களுக்கு உபயோகப்-படுத்துவது அதிகரித்து வருகிறது. ஆனால் ட்விட்டரில் நீங்கள் உங்களைப்பற்றிய விவரங்களை நீங்களாகவே வெளியிடாதவரை யாருக்கும் தெரியாது. ட்விட்டர் எனப்படுவது 140 எழுத்துக்கள் மட்டுமே எழுத முடிந்த ஒரு குறுஞ்சேவை SMS போன்றது. புகைப்படம், வீடியோ போன்றவை EXTERNAL LINK ஆக லோட் ஆகும். அதாவது அந்த லிங்கையோ அல்லது செய்தியையோ கிளிக் செய்து புகைப்படத்தைக் காணலாம் முதலில் http://twitter.com இணையதளத்திற்கு சென்று ஒரு free account திறக்கவும். நீங்கள் லாக்-இன் செய்தவுடனே இதுபோன்ற ஒரு முகப்புப்பக்கம் தெரியும்.

## கைபேசியில் இணையத்தளங்கள் தமிழில்



தற்போது இணையதளங்கள் எல்லாம் தமிழில் காணப்படுகின்றது. சில கையடக்க தொலைபேசியில் தமிழ் மொழி காணப்படுவதில்லை. கவலையை விடுங்கள்... OPERA MINI யில் பார்க்கலாம் அதற்கு ஒரு வழி முறை: OPERA MINI BROWSER இன் URL ADDRESS BAR இல் "opera:config" என TYPE செய்து ENTER பண்ணுங்கள்.

USER SETTING பக்கம் ஒன்று வரும். அதில; "use bitmap fonts for complex scripts" என்பது DEFAULT ஆக "No" என இருக்கும். அதனை "Yes" என மாற்றம் செய்து "Save" BUTTON ஐ கிளிக் செய்யுங்கள்.

இப்பொழுது உங்கள் கையடக்க தொலைப்பேசியிலும் தமிழ் இணையத்தளங்களை பார்க்க முடியும் வாசிக்க முடியும்.

## லேசான தாடி வளர்க்கும் ஆண்கள் பெண்களை கவருகின்றனர்: ஆய்வில் தகவல்



லேசான தாடி வளர்க்கும் ஆண்கள் பெண்களை கவருவதாக ஆய்வில் தெரிய வந்துள்ளது. ஆஸ்திரேலியாவில் உள்ள நியூ சவுத் வேல்ஸ் பல்கலைக்கழக நிபுணர்கள் நூதனமாக ஒரு ஆய்வை மேற்கொண்டனர். அதன்படி 5 மற்றும் 10 நாட்கள் முக சவரம் செய்யாமல் லேசான தாடியுடன் கூடிய ஆண்களின் புகைப்படங்களை பெண்களிடம் காட்டினர். இவர்களில் உங்களை கவருபவர் யார்? என்ற கேள்வி கேட்கப்பட்டது. 351 பெண்கள் மற்றும் 177 திருநங்கைகளிடம் இதற்கு பதில் அளிக்கும்படி கோரப்பட்டது. அதற்கு 10 நாட்களாக முகச்சவரம் செய்யாமல் லேசான தாடியுடன் கூடிய ஆண்களே தங்களுக்கு பிடித்ததாக பெண்களும், திருநங்கைகளும் தெரிவித்தனர். 5 நாள் தாடி வளர்த்து இருந்த ஆண்களை பிடித்ததாக மிக குறைந்த அளவிலான பெண்கள் கருத்து கூறியிருந்தனர்.

# ஒரு கொலையின் கதை

10 (மாயன்)

நிபுணத்துவம் பெற்ற அந்தக் காவலர் கேதீஸின் ஆடைகள் தழுவாத உடலை மெதுவாகப் பரிசோதிக்கத் தொடங்குகின்றார்....

அங்குதான் இக் கொலைக்கான முக்கிய தடயமொன்றை கேதீஸ் வைத்துக் கொண்டிருக்கின்றான் என்பதை அவர் முதலில் அறியவில்லை.

அக்காவலர் மெதுவாக கேதீஸின் இடது கை விரல்களைத் துளாவினார். அவை சில்லிட்டுப் போய் இருந்தன. இப்போது ஆடை தழுவாத அவனது வலது கை விரல்களின் ஊடாக அவரது கவசமிடப்பட்ட கைகள் நுழையும் போதே ஏதோ தட்டுப்பட்டது. அதுதான்... அது தான் இவ் கொலையின் விசாரணைகளைப் பெரும் திருப்பு முனைக்கு எடுத்துச் சென்ற தடயமாக இருந்தது....

சற்று முன் நகர்வோமா?.... கேதீஸ் தனது மனைவியின் வீட்டிலிருந்து உந்துருளியில் புறப்பட்ட போது கொலைஞன் ஒருவன் செய்துகொண்டிருந்த வேலை என்னவென்பது உங்களுக்கு ஞாபகம் இருக்கின்றதா?

வெளிநாட்டிற்கு கைத்தொலைபேசியின் ஊடாகப் பலதடவைகள் தொடர்புகொண்டபடியால் அவனது கைத்தொலைபேசியன் பண இருப்பு குறைந்திருந்தது. அதனை மீள நிரப்புவதற்காக அவன் மீள் நிரப்பு அட்டையொன்றைச் சுரண்டி கைத்தொலைபேசியை மீள் நிரப்பிக் கொண்ட போது தொலை பெுசி அழைப்பொன்ற அக்கணத்தில் அவனுக்குக் கிடைக்கவே அந்த பயன்படுத்தப்பட்ட மீள் நிரப்பு அட்டையைக் கீழே எறிந்ததாக அவன் நினைத்துக் கொண்டான். எனினும் அவ்வட்டையை அவன் தனது ரீசேட்டின் பொக்கற்றினுள் தான் வைத்திருந்தான்.

கேதீஸைக் கொலை செய்யும் போது அவர்கள் அவனுடன் இழுபறி பட்ட வேளை அந்த மீள் நிரப்பு அட்டையைக் கேதீஸ் தனது வலது கைக்குள் பத்திரப்படுத்திக் கொண்டுள்ளான். அவ்வட்டைதான் இக் கொலைக்கான புலனாய்வில் திருப்பத்தை ஏற்படுத்தும் தடயமாக அக் காவலருக்குக் கிடைத்தது.

இரத்தம் கசிந்திருந்த அந்த அட்டையை சேதம் ஏதுமின்றி இலாவகமாக அக் காவலர் வெளியே எடுத்துப் பொதி செய்துகொண்டார்.

இப்போது காவல்துறையின் அனைத்துச் சடங்குகளும் அவ்விரவில் நிறைபெற்றிருந்தன. தடயவியல் நிபுணர்கள் அவ்விடத்தை விட்டு அகல காவலர்கள் நால்வர் அவ்விடத்தைக் காவல் செய்யும் பணியைப் பொறுப்பேற்கின்றனர்.

அதிகாலை ஒரு மணியளவில் மரணவிசாரணை அதிகாரியும், நீதிபதியும் காவல் துறையினருடன் கொலை நடந்த இடத்திற்கு வருகை தந்திருந்தனர். அவர்களது விசாரணைகள் மேலும் ஒரு மணித்தியலத்திற்கு [illegible] இரண்டு மணி[illegible] உத்தரவிற்கு அமைய கேதீஸின் உடலை வைத்தியசாலைக்கு அனுப்ப காவல்துறை வண்டி அவ்விடத்திற்கு வருகை தந்தது.

அவனைத் தூக்கியேற்றுவதற்கு அவனது தகப்பனும் மாமனார்கள் இருவரும் இன்னும் ஒருவருமாய் சேர்ந்து சில்லிட்டிருந்த அந்த மகனை, மருமகனை, மாற்றானைத் தூக்கினர். அதுவே தனது அன்பு மகனைச் சுமக்கும் இறுதிக் கணம் என்பதை அவனது தகப்பன் அக்கணத்தில் உணர்ந்து கொண்டார். உண்மையின் கனம் தாங்காது அவர் உடல் குழுங்கத் தொடங்கியது.

சிறிது நேரத்தில் அந்தக் கொலை நடந்த இடம் வெறிச்சோடிப் போயிற்று. நான்கு காவலர்களைத் தவிர எவரும் அங்கில்லை.

மறுநாள் திருமலையெங்கும் காட்டுத் தீயாய் செய்தி பரவியிருந்தது. கொலைக்கான காரணங்களை மக்கள் தாமாகவே உருவாக்கி தம்மிடையே பகிர்ந்து கொள்ளத் தொடங்கியிருந்தனர். எனினும் அக் கொலை அனைவரையும் ஏதோ ஒரு விதத்தில் பாதித்திருந்தது.

காவல்துறையின் உயர் பிடத்தில் வேறுவகையான அழுத்தம் ஒன்று உருவாகத் தொடங்கிற்று. கொல்லப்பட்டவர் ஒரு தமிழர். ஐக்கிய இராச்சியத்திலிருந்து நாட்டுக்குச்



சுயவிருப்பின் பேரில் திரும்பியிருந்தவர். அவரது மனைவி தற்போது ஐக்கிய ராச்சியத்தின் வதிவிட அனுமதியைப் பெற்றுள்ளவர். எனவே சர்வதேச அழுத்தம் ஒன்று இக் கொலையின் மீது படியத் தொடங்கிற்று.

அடுத்து இக் கொலையை பாதுகாப்புத் தரப்பினரே செய்தனர் எனக் கூறி சர்வதேச அரங்கில் நாட்டுக்கு அவப்பெயரை ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்டுவதாக இணையத்தளங்களில் செய்திகள் (en.hotpuwath.com) (www.defence.lk) வெளியாகத் தொடங்கியிருந்தன.

எனவே மிக வேகமாக இக் கொலையில் துப்புத் துலக்க வேண்டிய கட்டாயத்திற்கு காவல்துறையும் அரசும் தள்ளப்பட்டன.

தடயப் பகுப்பாய்வு முடிவுகள் கிடைக்கும் காலப்பகுதிக்கிடையில் காவல்துறையின் முழுக் கவனமும் கேதீசைச் சார்ந்நதவர்களிடமிருந்து ஏதாவது தகவலைப் பெற்றுக்கொள்ள முடியுமா? என்பதாகவே இருந்தது.

அவர்களின் கழுகுக் கண்ணில் முதலில் மாட்டிக் கொண்டவள் கேதீஸின் மனைவியன தங்கை தான். அதற்கான காரணம் சகொலை நடக்கும் கடைசித் தருணம் வரை கேதீசுடன் இருந்தவள் அவள் என்பதே. எனவே கொலை நடந்த சில மணி நேரத்திலிருந்து அவள் மீதே விசாரணைகள் மையங் கொள்ளத் தொடங்கியிருந்தன. எனினும் ஒருவனுக்கு மட்டும் மனம் உறுத்திக் கொண்டேயிருந்தது......

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு முரசு

## பாடசாலை துடுப்பாட்டச் சங்கத்தின் 15 வயதிற்குட்பட்ட போட்டிகள்: கோணேஸ்வரா இந்துக் கல்லூரி வெற்றி

மாவட்ட மட்டத்தில் நடைபெற்று வரும் பாடசாலை துடுப்பாட்டச் சங்கத்தின் 15 வயதிற்குட்பட்ட 3ம் பிரிவிற்கான போட்டிகளில் ஒன்றில் இ.கி.ச. கோணேஸ்வரா இந்துக் கல்லூரி 161 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

பதிவியா 102வது தடம் வித்தியாலயத்தின் அணியுடனான போட்டியிலேயே இவ் வெற்றி ஈட்டப்பட்டுள்ளது. 50 பந்தப் பரிமாற்றங்களைக் கொண்ட இப் போட்டியில் முதலில் துடுப்பாடிய இந்துக் கல்லூரி 42.5 பந்துப் பரிமாற்றங்களில் 276 ஓட்டங்களைக் குவித்து தனது சகல இலக்குகளையும் இழந்திருந்தது. துடுப்பாட்டத்தில் கே. கிருஸாந்தன் 56 பந்துகளை எதிர்கோண்டு 41 ஓட்டங்களைப் பெறிறருந்தார். பந்து வீச்சில் இஸான் லக்மால் 10 பந்துப்பரிமாற்றங்களில் 56 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளைக் கொய்திருந்தார்.

பின்னர் பதிலளித்தாடிய பதிவிய வித்தியாலயம் 25 பந்துப் பரிமாற்றங்களுக்குள் தமது சகல இலக்குகளையும் பறிகொடுத்து 114 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது. அவ்வணியின் மாலக்க 46 பந்துகளை எதிர்கொண்டு 26 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். பந்து வீச்சில் 6.2 பந்துப்பரிமாற்றங்களில் 31 ஓட்டங்களைக் கொடுத்து ரிஷிகீர்த்தனன் 5 இலக்குகளை விழுத்தி இந்துக் கல்லூரியின் வெற்றிக்கு வித்திட்டார்.

(கதிரவன்)

## மகளிர் கால்பந்தாட்ட மாகாணப் போட்டி - கடுக்காமுனை வாணி வித்தியாலயம் சம்பியன்

கிழக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான கால்பந்தாட்ட மகளிா அணிப் போட்டிகளில் மாகாண வெற்றிச் சம்பியன்களாக கடுக்காமுனை மகளிர் அணி தெரிவாகியுள்ளது.

வளப் பற்றாக்குறையைக் கடுமையாக எதிர்கொண்டுள்ள இப்பாடசாலையின் மகளிர் அணி பெற்ற வெற்றியானது சாதிக்க முனைபவர்களுக்கு தடைகள் எவையுமில்லை என்பதை உலகறியச் செய்துள்ளது என அக் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் பெருமிதததுடன் தெரிவித்துள்ளனர்.

இவ்வணி ஜுலை 4ம் திகதி இரத்தினபுரியில் நடைபெறுகின்ற தேசிய மட்டப் போட்டிகளில் பங்குப்றறச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வணியின் பயிற்றுவிப்பாளராக விஞ்ஞானக் கல்வி ஆசிரியர் திரு. ஜீவரட்ணம் அவர்கள் செயற்படுகின்றார்.

"காந்தி ஸ்ரார்" வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தது



## ஸ்பெயின் அணியின் தொடர்வெற்றிக்கு முற்றுப்புள்ளி வைத்து சாம்பியன் பட்டம் பெற்றது பிரேசில்



கான்படரேசன் கோப்பை கால்பந்து போட்டி பிரேசிலில் நடந்தது. இதன் இறுதிப்போட்டியில் பிரேசில்- ஸ்பெயின் அணிகள் மோதின. பிரேசில் வீரர்களின் தாக்குதல் ஆட்டத்துக்கு உலக மற்றும் ஐரோப்பிய சாம்பியனான ஸ்பெயின் அணியால் தாக்குபிடித்து விளையாட முடியவில்லை. பிரேசில் 3-0 என்ற கோல் கணக்கில் ஸ்பெயினை வீழ்த்தி சாம்பியன் பட்டம் பெற்றது. கான்படரேசன் கோப்பையை தொடர்ந்து 3-வது முறையாக வென்று ஹாட்ரிக் சாதனை படைத்தது. பிரெட் 2 கோலும் (2-வது நிமிடம், 47-வது நிமிடம்) நட்சத்திர வீரர் நெய்மார் ஒரு கோலும் (44-வது நிமிடம்) அடித்தனர். ஸ்பெயின் அணியால் ஒரு கோல்கூட போட முடியாமல் போனது மிகவும் ஏமாற்றமே. 55-வது நிமிடத்தில் அந்த ஒரு நல்ல வாய்ப்பை தவறவிட்டது. பெனால்டி மூலம் கிடைத்த வாய்ப்பை செர்ஜி ராமோஸ் தவறவிட்டார். முரட்டு ஆட்டத்தில் ஈடுபட்டதற்காக 68-வது நிமிடத்தில் ஸ்பெயின் வீரர் பிகே நடுவரால் சிவப்பு அட்டை காண்பிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டார். பிரேசில் அணி ஸ்பெயினை வீழ்த்தியதன் மூலம் தொடர்ந்து 26 ஆட்டத்தில் வென்று வந்த ஸ்பெயின் அணி தோல்வியை தழுவியுள்ளது. கடைசியாக 2011-ம் ஆண்டு லண்டனில் நடந்த காட்சி போட்டியில் இங்கிலாந்திடம் 0-1 என்ற கணக்கில் தோற்றது. ஸ்பெயின் அணி 2010 உலக கோப்பை மற்றும், 2008, 2012 ஐரோப்பிய கோப்பையை வென்று இருந்தது. இந்தப்போட்டி தொடரில் ஸ்பெயின் வீரர் பெர்னாண்டோ டொரஸ் தங்க காலணியும், பிரேசில் வீரர் பிரேட் வெள்ளி காலணியும், மற்றொரு பிரேசில் வீரர் நெய்மார் வெண்கல காலணியும் பெற்றனர். முன்னதாக நடந்த 3-வது இடத்துக்கான ஆட்டத்தில் இத்தாலி அணி உருகுவேயை வீழ்த்தியது. ஆட்டத்தின் முடிவில் இரு அணிகளும் தலா 2 கோல் அடித்து இருந்தன. கூடுதல் நேரத்திலும் இதே நிலையே நீடித்தது. இதனால் பெனால்டி கடைபிடிக்கப்பட்டது. இதில் இத்தாலி 3-2 என்ற கணக்கில் வென்று 3-வது இடத்தை பிடித்தது.

## திருமணப்பந்தத்தில் இணைந்தார் அசோக் திந்தா



இந்திய கிரிக்கெட் வீரர் அசோக் திண்டா (வயது 29), கிரிக்கெட் ஆர்வலரும், மென்பொருள் கட்டுமான நிபுணருமான ஸ்ரேயாசி ருத்ரா என்ற பெண்ணை திருமணம் செய்ய உள்ளார். இவர்களது திருமணம் கொல்கத்தாவின் புறநகரான சின்சுராவில் வரும் 22-ம் தேதி நடைபெறுகிறது. அதன்பின்னர் 24-ம் தேதி கொல்கத்தா கிளப்பில் திருமண வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

## நியூசிலாந்து வேகப்புயல் ஓய்ந்தது



நியூசிலாந்து கிரிக்கெட் வீரர் மார்ட்டின் சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். டெஸ்ட் போட்டியில் அதிக விக்கெட் கைப்பற்றிய 3-வது நியூசிலாந்து வீரர் ஆவார். 38 வயதான மார்ட்டின் 71 டெஸ்டில் 233 விக்கெட் கைப்பற்றி உள்ளார். ரிச்சர்டு ஹாட்லி 431 விக்கெட்டும், வெட்டோரி 360 விக்கெட்டும் எடுத்து உள்ளனர். அதற்கு அடுத்த நிலையில் கிறிஸ் மார்ட்டின் உள்ளார்.

## விம்பிள்டன் - நடப்பு சாம்பியன் செரீனா அதிர்ச்சி தோல்வி



இந்த ஆண்டின் விம்பிள்டன் டென்னிஸ் போட்டியானது, முன்னணி வீரர், வீராங்கனைகளுக்கு கடும் சோதனையாக அமைந்துள்ளது. காயம் காரணமாக 10-க்கும் மேற்பட்ட வீரர்கள் வெளியேறியுள்ளனர். அதேசமயம் தரவரிசையில் முன்னிலை பெற்றுள்ள வீரர்கள் இளம் வீரர்களிடம் தோல்வியடைகின்றனர். அந்த வரிசையில் இப்போது நடப்பு சாம்பியனும், உலகின் முதல்நிலை வீராங்கனையுமான செரீனா வில்லியம்சும் இணைந்துள்ளார். மகளிர் ஒற்றையர் 4-ம் சுற்றில், 23ம் தரநிலையில் உள்ள ஜெர்மன் வீராங்கனை லிசிக்கியை எதிர்கொண்ட செரீனா, 2-6, 6-1, 4-6 என்ற செட் கணக்கில் அதிர்ச்சி தோல்வியடைந்து வெளியேறினார்.

### எஞ்சிய போட்டிகளில் இருந்து டோனி நீக்கப்பட்டுள்ளார்



டோனி தலைமையிலான இந்திய அணி மேற்கிந்திய தீவு சுற்றுப்பயணம் மேற்கொண்டு முத்தரப்பு கிரிக்கெட் தொடரில் விளையாடி வருகிறது. மேற்கிந்திய தீவுக்கு எதிரான முதல் போட்டியில் இந்தியா தோல்வியடைந்தது. இப்போட்டியின்போது, அணித்தலைவர் டோனிக்கு தசைப்பிடிப்பு ஏற்பட்டது. இதன் காரணமாக விக்கெட் க்காப்பாளர் பணியை தினேஷ் கார்த்திக்கிடம் ஒப்படைத்தார். இந்த தசைப்பிடிப்பு சரியாகாததால் எஞ்சிய போட்டிகளில் இருந்து டோனி நீக்கப்பட்டுள்ளார். அவருக்கு பதில் அம்பதி ராயுடு அணிக்கு அழைக்கப்பட்டிருக்கிறார். கோலி அணித்தலைவர் பொறுப்பில் இருந்து அணியை வழிநடத்துவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்கில்..

33 ஆசனங்களைக் கொண்டமைந்துள்ள கிழக்கு மாகாண சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 11 ஆசனங்களையும், முஸ்லிம் காங்கிரஸ் 7 ஆசனங்களையும் கொண்டுள்ளன.

எனவே இவ்விரு கட்சிகளும் ஆதரவளிக்கும் தீர்மானத்தை எதிர்க்குமாயின் அத் தீர்மானம் தோல்வியடையும் நிலையையே அடையும். அதனால் சாணக்கியமுள்ள அரசு தற்போதைக்கு இவ்வகைத் தீர்மானத்தை கிழக்கு மாகாண சபையில் முன்மொழியுமா என்பது கேள்விக்குறியே. அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுவான நிலைப்பாடு 13வது திருத்தச் சட்டத்தில் எந்தவொரு மாற்றத் தையும் செய்ய அரசிற்கு இடமளிக்கப் போவதில்லை என்பதாக இருப்பதால் அக்கட்சியும் கிழக்கு மாகாண சபையில் இவ் ஆதரவுத் தீர்மானத்தை எதிர்த்தே வாக்களிக்கும் என எதிர்வுகூறலாம்.

தற்பொது வரை ஆறு மாகாண சபைகளில் 13வது திருத்தத்தை திருத்தும் அரச முயற்சிக்கு ஆதரவாகத் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டுள்ள நிலையில் மேல் மாகாண சபையிலும், கிழக்கு மாகாண சபையிலுமே இத் தீர்மானத்தைப் பற்றி இன்னமும் பேசப்படாமல் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முனைகின்றதா?..

முக்கிய அமைப்புக்களை இணக்கப்பாட்டிற்குக் கொண்டுவரும் முயற்சியையே இம் முகவராண்மை நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் லண்டனை மையப்படுத்தி இயங்கும் உலகத் தமிழர் பேரவை ஆகிய மூன்ற அமைப்புக்களையும் பொதுத் தந்திரோபாயமொன்றுக்குள் கொண்டுவருவதற்கான கொள்கை ரீதியான இணக்கப்பாடொன்றை எட்டும் முயற்சியை முன்னெடுத்துள்ள இம் முகவராண்மையகம் அதன் முதற் கட்டப்பணியாக இம்மூன்று அமைப்புக்களினதும் பிரதிநிதிகளை பேர்லின் மாநகரில் சந்தித்துத் தமிழர் பிரச்சனைக்கான பொதுத் தந்திரோபாயச் செயற்பாட்டிற்கான முழு விடயங்களையும் கலந்தாலோசித்திருப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இம் முகவராண்மைக்கு ஜெர்மனியின் வெளிவிவகாரத் திணைக்களமும், பொருளாதாரக் ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான ஜெர்மனிய அமைச்சகமும் நிதி வழங்கி வருவது குறிப்பிடத் தக்கது.

இக்கலந்துரையாடல் ஜுன் மாதம் 22ம் மற்றும் 23ம் திகதிகளில் நிகழ்ந்துள்ளதாகவும் லண்டனைத் தளமாகக் கொண்டு இயங்கும் மற்றோர் அமைப்பான பிரித்தானியத் தமிழர் பேரவையும் இக்கலந்துரையாடல்களில் பங்கேற்றதாக நம்பகரமற்ற செய்திகள் தெரிவித்திருக்கின்றன.

வடக்கின் மாகாணசபைத் தேர்தல்களை முன்னிட்டுப் பொது இணக்கப்பாடொன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் இடையே உருவாகியிருப்பின் அதன் பெறுபேறு நலமானதாய் இருக்கும் என அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

நடைபெறவுள்ள வடக்குத் தேர்தலை பெரும்பாலும் புறக்கணிக்கும் முடிவிலேயே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இருப்பதாகத் தெரிகின்றது. ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ தற்போதுவரை தேர்தல்கள் தொடர்பாக எவ்வித முடிவையும் மேற்கொள்ளாமலிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## மாணவர்கள் போராட்டம்..

மாணவர்கள் பிரதேசவாசிகள் பழைய மாணவர்கள் பாடசாலை அபிவிருத்தி குழு உறுப்பினர்கள் என அனைவரும் ஒன்றாக இணைந்து செவ்வாய்க்கிழமை பாடசாலைக்கு முன் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். காலை 8.00 மணியளவில் ஆரம்பமான போராட்டம் 10 மணிவரை நீடித்ததாகவும் இதனால் சாலையின் போக்குவரத்து பாதிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இச் சம்பவம் தொடர்பாக பிரதேசவாசிகள் கூறுகையில் கடந்த சில மாதங்களாக பாடசாலையில் நடைபெற்று வரும் மாலை நேர வகுப்புகளில் கலந்து கொள்ளும் மாணவிகளுக்கு இடையூறு விளைவித்ததாகவும் பாடசாலை சொத்துகளுக்கு சேதம் விளைவித்ததாகவும் இதன் தொடர்ச்சியாகவே கடந்த ஞாயிற்றுக்கிழமை மாணவர்கள் விளையாடச் சென்ற போது அங்கு வந்த சில இளைஞர் கூட்டம் முரண்பாடுகளில் ஈடுபட்டதாகவும் இனி மாணவர்களை விளையாட விடமாட்டோம் எனக் கூறிச் சென்றதாகவும் மறுநாள் மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்த மாணவர்கள் மீது பல இளைஞர்கள் சென்று திடீர் தாக்குதலை நடத்தியதாகவும் கூறப்படுகின்றது. இதனால் இரண்டு மாணவர்கள் படுகாயம் அடைந்து திருகோணமலை பொது மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

இவ்வீதி மறியல் போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் குச்சவெளி பிரதேச சபை தவிசாளர் அ. முபாறக் அவ்விடம் சென்று மாணவர்களின் நலன்கருதி குச்சவெளி பிரதேச சபைக்கு சொந்தமான மைதானத்தை பாடசாலைக்கு கையளிப்பதாக பத்திரம் மூலம் உறுதியளித்ததன் பின் போராட்டம் கைவிடப்பட்டதாகவும் இனிவரும் காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெற்றால் தொடர்ச்சியான போராட்டங்களில் ஈடுபட மக்கள் தயார் நிலையில் உள்ளதாகவும் இதற்கு காரணமானவர்கள் உடனடியாக தண்டிக்கபடவேண்டும் எனவும் கூறியுள்ளனர்.

எனினும் இவ் விளையாட்டுத்திடலை பாடசாலைக்குக் கையளிக்கும் அவரது முடிவை மறுநாள் அவர் மற்றோர் கடிதத்தின் மூலம் இரத்துச் செய்துள்ளார்.

தொடர்ந்து ஜுலை 3ம் திகதி காலையில் பாடசாலைக்கு வருகைதந்த மாணவிகள் சிலர் பாடசாலைக் கலாசாரத்திற்கு ஒவ்வாத உடையை அணிந்திருந்தமையால் அதனை திருத்துமாறு அதிபரால் கேட்டுக்கொள்ளப்பட்ட போது பிரச்சனை பெரிதாகியுள்ளது. அதனைத் தொடர்ந்து வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளரின் தலையீட்டை அடுத்தே பிரச்சனைக்கான தீர்வு பெறப்பட்டுள்ளது.. தீர்வின் பின்னரும் ஆற்றல் மிக்க சில மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிப்படைந்து உள்ளதாகத் தெரியவருகின்றது.



## விலை உயரும்..

130 ரூபாவிற்கு மேலான பெறுமதியில் இருக்கின்றது.

அமெரிக்கப் பொருளாதார வளர்ச்சி நிலையைக் கண்ணுற்றுள்ள வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கையிலிருந்து தமது முதலீடுகளை மீளப் பெற்றுக்கொள்ளும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அவ்வாறு மீளப் பெற்றுக்கொள்ளும் முதலீட்டை அமெரிக்கப் பங்குச் சந்தையில் முதலிட அவர்கள் விரும்புவதையே அமெரிக்க பங்குச் சந்தையின் வளர்ச்சி விகிதம் குறித்து நிற்கின்றது.

## கொலை முயற்சி..

வீட்டிற்கு அருகில் மறைந்திருப்பதாக கிராம மக்களுக்குத் தகவல் கசிந்துள்ளது. அதனைத் தொடர்ந்து அணிசேர்ந்த கிராம மக்கள் காவல்துறை அவசர எண்ணுடன் தொடர்புகொண்டு தகவலை தெரிவித்ததுடன் அதிரடி நடவடிக்கையாக அவர்கள் மூவரையும் சுற்றி வளைத்துள்ளனர். அதனைத் தொடர்ந்து வனத்துறை அலுவலர் தனது சுடுகலனால் மக்களைக் குறிவைத்துத் தாக்குதலை மேற்கொண்ட போதும் அத் தாக்குதல் பலனளிக்கவில்லை. சுற்றிவளைக்கப்பட்டு மக்களால் சிறைப்பிடிக்கப்பட்ட அவர்கள் மூவரும் குச்சவெளி காவல்துறையிடம் கையளிக்கப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## சமாதானக் கொலைஞர்களுக்கு எதிராகக் கழகங்கள் தமது குரல்களை உயர்த்த வேண்டும் - பேராயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை -

சமாதானத்தைக் குழப்புபவர்களுக்கு எதிராக ரோட்டரிக் கழகம் போன்ற அனைத்துக் கழகங்களும் தமது குரல்களை உயர்த்த முன்வரவேண்டும் என அதி வணக்கத்திற்குரிய பேராயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்கள் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை மாவட்டதின் ரோட்டறிக் கழகத்தில் 35வது மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இக் கருத்துக்களை முன்வைத்துள்ளார். ரோட்டறி இல்லத்தில் நடைபெற்ற இம் மாநாட்டில் அக் கழகத்தின் நடப்பு வருடத் தலைவராக என்.ரி. ரகுராம் அவர்கள் தெரிவானார்கள். அம் மாநாட்டின் சிறப்பு விரந்தினராகக் கலந்து கொண்ட பெருந்தகை ரோட்டறிக் கழகத்தின் செயற்பாடுகளை மெய்ச்சியதுடன் ரோட்டறிக் கழக அங்கத்தவர்கள் அமைதிக்காகவும் சமாதானத்திற்காகவும் கடுமையாக உழைக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டதுடன் சமூக அமைதியைக் குலைக்கும் காரணிகளை இனங்கண்டு அவற்றைக் களைய முன்வரவேண்டும் எனவும் தெரிவித்திருந்தார்.



## 'அண்ணா வீதி' நகரசபைத் தலைவரால் திறந்து வைப்பு

கடந்த 28.06.2013 வெள்ளிக்கிழமையன்று அன்புவழிபுரத்தில் நகரசபையின் நிதி ஒதுக்கீட்டில் புனரமைக்கப்பட்ட புதிய வீதிக்கு அண்ணா வீதி என பெயர் சூட்டப்பட்டு நகரசபைத் தலைவரான திரு.க. செல்வராஜா (சுப்ரா) அவர்களால் திறந்து வைக்கப்பட்டது .இந் நிகழ்வின் போது மக்களால் ஒழுங்கு செய்யப்பட்ட ஆலய வழிபாட்டிலும் நகரசபைத் தலைவர் கலந்து கொண்டார். இந் நிகழ்வில் ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். அன்புவழிபுர கிராம அபிவிருத்திச் சங்க செயலாளர் ப. கந்தசாமி அவர்களும் இந் நிகழ்வுக்கு வருகை தந்திருந்தார்.



## இரவோடு இரவாக..

அதற்குள் புத்தபகவானின் சிலையை நிறுவுவதற்கு நான் யாரிடமும் கேட்கத் தேவையில்லை. இந்த புத்தர் சிலையை நான் தான் வைத்தேன். 1960ம் ஆண்டு மார்ச் மாதம் 06ம் திகதி வி.ஜேமிஸ் அபுகாமி என்பவரால் புத்த ஜயந்தி விகாரைக்கு இரண்டு ஏக்கரும், பதினேழு பேர்ச் அடங்கலான காணியை அன்பளிப்புச் செய்திருந்தார்.

கடந்த யுத்த காலத்தின் போது விகாரையின் காணிகளை முறையான பராமரிப்பு இல்லாத காரணத்தினால் சிலரால் விகாரையின் காணிகள் பிடிக்கப்பட்டு தற்போது பாடசாலை மைதானம் என்று குறிப்பிடப்படும் காணி அடங்களாக இரண்டு ஏக்கருக்கும் குறைவாக காணியே உள்ளது.

இந்த காணி விவகாரம் தொடர்பாக வாழைச்சேனை நீதிமன்றில் வழக்கு நடைபெற்ற போது தனக்கு தமிழ் தெரியாது என்றும், இந்த வழக்குத் தொடர்பாக தமிழில் எந்தவிதமான அறிவித்தல்களும் வழங்காமல் சிங்களத்தில் மொழி பெயர்த்து அனுப்புமாறும் எழுத்து மூலம் நீதிமன்றத்திற்கு அறிவித்ததன் பின்னர் என்ன நடைபெற்றுள்ளது என்று எனக்கு எதுவும் தெரியாது. எனக்கூறினார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விமுரசு

## க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல்

### பாடம் - விஞ்ஞானம்

1. என்பு மீன்கள் பற்றி கூறப்பட்டவற்றுள் சரியானது அல்லது சரியானவை?
   அ. பொதுவாக அருவிக்கோட்டு வடிவமானது.
   ஆ. சுவாசம் பூக்கள் மூலம் நடைபெறும்.
   இ. பூப்பிளவுகள் உடல்மேற்பரப்பில் தனித்தனியாக திறந்திருக்கும்.
   1. அ, ஆ  2. அ, இ  3. ஆ, இ  4. மூன்றும் சரி
2. பின்வரும் அங்கிகளில் எதன் இனப்பெருக்க கட்டமைப்பு வெறுங்கண்ணுக்கு தெரியக் கூடியதாக இருக்கும்?
   1. மியுக்கர்  2. றைசோபஸ்
   3. காளான்  4. பென்சிலியம் நொட்டேரம்
3. தூண்டல் ஏற்படும் போது விரைவாகவும் திறமையாகவும் சுருங்கக்கூடிய ஆற்றலைக் கொண்டதும், கலமுதலுருவில் உள்ள இளம் நிற, கருமை நிற பட்பிகைகள் வெறுங் கண்ணுக்கு புலப்பட கூடிய தசையிழையம் எது?
   1. வன்கூட்டுத்தசை  2. மழ மழப்பான தசை
   3. இதய தசை  4. மழ மழப்பான தசையும், இதய தசையும்
4. சுவாசப்பையின் காற்றுறைகள் போமனின் உறையின் உட்புறச்சுவர் போன்றவற்றில் காணப்படும் மேலணி இழையம் எது?
   1. செதின் மேலணி  2. கனமேலணி  3. கம்பி மேலணி  4. பிசிர் மேலணி
5. ஒளித்தொகுப்பின் போது உற்பத்தியாக்கப்பட்ட குளுக்கோசு தற்காலிகமாக மாப் பொருளாக மாற்றப்பட்டு பச்சையவுருமணியினுள் சேமிக்கப்படும். மாப்பொருள் பின்னர் எவ்வடிவில் தாவரத்தின் ஏனைய இடங்களுக்கு கொண்டு செல்லப்படுகிறது.
   1. குளுக்கோசு  2. சுக்குரோசு  3. மோல்ரோசு  4. மாப்பொருள்
6. மண்ணீர் வேர்மயிரிலிருந்து தாவரகாழ் கலன் வரை கடத்தப்படும் பாதையை சரியாக குறிப்பது?
   1. மேற்றோல் → அகத்தோல் → பரிவட்ட உறை → மேற்பட்டை → காழ்
   2. மேற்றோல் → மேற்பட்டை → அகத்தோல் → பரிவட்டஉறை → காழ்
   3. மேற்றோல் → மேற்பட்டை → பரிவட்ட உறை → அகத்தோல் → காழ்
   4. மேற்றோல் → பரிவட்ட உறை → மேற்பட்டை → அகத்தோல் → காழ்
7. காச நோய் காரணி பற்றீரியாவான பசிலிஸ் ரியூபளோசிஸ் என்ற நுண்ணங்கி யாரால் கண்டுபிடிக்கப்பட்டது?
   1. வில்லியம் கார்வே  2. றொபர்ட் கொக்
   3. அலெர்சாண்டர் பிளமிங்  4. கிரகர் மெண்டல்
8. சுவாசப்பை சிற்றறைகளில் வாயுப்பரிமாற்றம் நிகழ போதிய சுவாசம் கிடைப்பதற்கு குருதிகலங்கள் எவ்வாறு சிறப்படைந்துள்ளது?
   1. செங்குழியங்களின் எண்ணிக்கை அதிகமாக காணப்பட்டது.
   2. வெண்குழியங்களின் எண்ணிக்கை அததிகமாக காணப்பட்டது
   3. செங்குழியங்களின் விட்டம் குருதி மயிர்த்துளைக்குழாயின் விட்டத்திலும் அதிகமாக காணப்பட்டது.
   4. செங்குருதி கலங்கள் மயிர்துளை குழாயிகளினூடாக விரைவாக செல்லக் கூடியதாக இருந்தது.
9. ${}^{27}_{13}x$ (x என்பது நியம குறியீடு அல்ல) எனும் மூலகம் உருவாக்கும் ஒட்சைட்டு எவ்வியல்பை காட்டும்?
   1. அமில இயல்பு  2. ஈரியல்பு
   3. கார இயல்பு  4. சேர்வையை உருவாக்காது
10. 34.5கி $k_2co_3$ இல் உள்ள அணுக்களின் எண்ணிக்கை எவ்வளவு?
   1. $\frac{6.02\times10^{23}\times2}{3}$  2. $\frac{6.02\times10^{23}\times3}{4}$  3. $\frac{6.02\times10^{23}\times4}{3}$  4. $\frac{6.02\times10^{23}}{4}$
11. A எனும் மூலகத்தின் அணு எண் 2. B எனும் மூலகத்தின் அணு எண் 10 எனின், A, B ஆகிய மூலகங்களின் கூட்டங்கள் முறையே
   1. II ம், VIII ம் கூட்டம்  2. II ம், III ம் கூட்டம்
   3. VIII ம், VIII ம் கூட்டம்  4. IIம், IV ம் கூட்டம்
12. செப்பு காப்பேற்று கரைசலினுள் காபன் மின் வாய்களைப் பயன்படுத்தி மின்பகுப்பு செய்யும் போது அனோட்டில் நடைபெறும் தாக்கம்?
   1. $cu^{2+}{}_{(ag)}+2e\rightarrow cu$  2. $4OH_{(aq)}\rightarrow2H_2O_{(2)}+O_{2(g)}+4e$
   3. $CU_{(s)}\rightarrow CU^{2+}{}_{(aq)}+2e$  4. $2H^+{}_{(aq)}+2e\rightarrow H_{2(g)}$
13. காபன் அல்லது காபனோரொட்சைட்டு மூலம் தாழ்த்திப் பெறப்படும் உலோக மூலகங்கள் எவை?
   1. Zn, Fe, Na  2. Pb, Cu, Au  3. Pb, Fe, Zn  4. Na, Au, Cu
14. பின்வரும் தீயணை கருவிகள் தொடர்பாக பிழையானது?
   1. நீர்த்தீயணை கருவி - கடதாசியில் ஏற்படும் தீயை கட்டுப்படுத்தும்
   2. நுரை தீயணை கருவி - மரப்பலகையில் ஏற்படும் தீயை கட்டுப்படுத்தும்
   3. ஏலோன் தீயணை கருவி - மின்னினால் ஏற்படும் தீயை கட்டுப்படுத்தும்
   4. உலர் பொலித்தீயணை கருவி - மக்னீசியம், பொற்றாசியம் போன்ற உலோகங்களில் ஏற்படும் தீயை கட்டுப்படுத்தும்.
15. ஒட்சிசன் வாயு தயாரிக்க பயன்படும் மூலப்பொருள் எது?
   1. $K_2MnO_4$  2. $H_2O$  3. $KNO_3$  4. $CaCO_3$
16. கீழ்வருவனற்றுள் அடையல் பாறை எது?
   1. களிக்கற்கள்  2. படிகம்  3. கருங்கல்  4. [illegible]

17. டவுன்சின் கலத்தினுள் உருகிய $NaCl$ ஐ மின்பகுக்கும் போது $NaCl$ இன் உருகு நிலையை குறைப்பதற்கு பயன்படும் இரசாயன பதார்த்தம் எது?
   1. $CaSO_4$  2. $CaCO_3$  3. $CaCl_2$  4. $Ca(OH)_2$
18. ஓய்வில் இருந்து புறப்பட்ட மோட்டார் வண்டி ஒன்று 7 செக்கனில் $40ms^{-1}$ எனும் வேகத்தை அடைந்தது எனின் மோட்டார் வண்டி சென்ற தூரம் எது?
   1. 280மீ  2. 140மீ  3. 47மீ
   4. 70மீ
19. நியூட்டனுக்கு சமனான அலகாக கருதப்படுவது எது?
   1. $Kgms^{-1}$  2. $Kgms^{-2}$  3. $Kgms^{-3}$  4. $JLs$
20. 20மீ உயரத்தில் இருக்கும் தேங்காய் ஒன்று சுயாதீனமாக விழும் போது நிலத்தை அடிக்கும் வேகம் எவ்வளவு?
   1. $5ms^{-1}$  2. $20ms^{-1}$  3. $10ms^{-1}$  4. $40ms^{-1}$

### பாடம் - கணிதம்

குரு கல்வி நிலையம்
திருகோணமலை

1. சுருக்குக. $\frac{2}{3}\times\frac{1}{2}$
2. பெறுமானம் காண்க. $3x-2=7$
3. 13ஐ துவித எண்ணாக மாற்றுக.
4. 

   x இன் பெறுமானம் காண்க.
5. சுருக்குக. $7\sqrt{2}+3\sqrt{2}-\sqrt{2}+3\sqrt{3}$
6. பெறுமானம் காண்க. $\log_5 625$
7. $30Kmh^{-1}$ எனும் கதியில் செல்லும் மோட்டார் வண்டி ஒன்று $1\frac{1}{2}$ மணித்தியாலத்தில் செல்லும் தூரம் எவ்வளவு?
8. $\in=\{1,2,3,4,5,6\}$, $A=\{2,3,5\}$ எனின், $n(A')$ ஐக் காண்க.
9. சதுரமுகி ஒன்றின் விளிம்பின் நீளம் 7cm எனின், அச்சதுரமுகியின் மொத்த மேற்பரப்பளவைக் காண்க.
10. $\frac{1}{f}=\frac{1}{v}+\frac{1}{u}$ இல் v யை எழுவாயாக்குக.
11. $y=(x-2)^2+4$ எனும் சார்பின்
    1. சமச்சீர் அச்சின் சமன்பாடு?
    2. திரும்பற் புள்ளியின் ஆள்கூறு யாது?
12. சுருக்குக. $\frac{3}{(x-y)}+\frac{2}{(y-x)}$
13. 

   x இன் பெறுமானம் காண்க.
14. தொட்டி ஒன்றின் நீள, அகல, உயரங்கள் முறையே $1\frac{1}{2}m, 2m, 1m$ ஆகும். இத்தொட்டியை நிரப்ப 100l/நிமிடம் எனும் வீதத்தில் நீர் நிரப்பப்படுகின்றது.. எனில், தொட்டி நிரம்ப தேவையான நேரத்தைக் காண்க.
15. 

   a, b ஆகியவற்றின் பெறுமானங்களைக் காண்க.
16. $2-3x\geq8$ எனும் சமனிலியின் தீர்வுகளை எண் கோட்டில் குறிக்க.
17. காரணி அறிவைப் பயன்படுத்தி சுருக்குக. $10.7^2-0.7^2$
18. $x^2+2x+3$, $x^2+x$, $3x^2$ இன் பொதுக் காரணிகளில் சிறியதைக் காண்க.
19. 3, 12, 48. . . எனும் விருத்தியில் முதல் 7 உறுப்புக்களின் கூட்டுத்தொகையைக் காண்க.
20. ஜதி தன்னிடமிருந்த 10,000 ரூபாவை 8வீத ஆண்டு வட்டி வழங்கும் நிதி நிறுவனம் ஒன்றில் வைப்பு செய்தாள். அவளுக்கு இரண்டு வருட இறுதியில் கிடைக்கும் (கூட்டு வட்டி முறையில்) மொத்தப்பணம் எவ்வளவு?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேசமுரசு

## இந்தியப் பொதுநலவழக்கில் எதிராளியாக கே.பி 1336 கோடி இந்திய வங்கி மோசடியிலும் தொடர்பாம்?

இந்தியப் பிரதமர் ரஜீவ்காந்தி கொலை வழக்கில் உண்மையைக் கண்டறிய குமரன் பத்மநாதனை இந்தியாவிற்குக் கொண்டுவரும் வழக்கு விசாரணைகளுக்காக முக்கிய காவல்துறை அதிகாரியொருவரை சென்னை உயர் நீதிமன்றத்திற்கு மத்திய அரசு அனுப்பியுள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பொதுநல வழக்கொன்றில் தமக்கான அறிவுறுத்தல்களைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடனேயே மத்திய அரசும், மத்திய புலனாய்வுத் துறையும் இந் நடவடிக்கையை எடுத்துள்ளன என டைம்ஸ் ஒவ் இந்தியா வின் செய்திகள் தெரிவிக்கின்றன.

சென்னை உயர் நீதிமன்றத்தில் பொதுநல வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ள மோகன்ராஜ் என்பவர் தனது வழக்கில் "கே.பி யின் மீதான அனைத்துக் குற்றச்சாட்டுக்களையும் இலங்கை அரசு கைவிட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. எனினும் அவர் ராஜிவ்காந்தி கொலை வழக்கில் சம்பந்தப்பட்டவர்என்பதனை இலங்கை கணக்கில் எடுக்கத் தவறியுள்ளது. இரகசியங்கள் பொதிந்துள்ள புதையல்-கே.பி. அவரை இந்தியாவிற்கு அழைத்து வந்து விசாரணைகள் செய்யுமிடத்து பல நிலுவையிலுள்ள வழக்குகளின் விபரங்கள் வெளியாகும் என்பதுடன் 1336 கோடி இந்திய வங்கி மோசடி தொடர்பான தகவல்களும் வெளியாகும் என" தெரிவித்துள்ளார்.

## பாகிஸ்தானில் சிறுமியின் சடலத்தை தோண்டியெடுத்து பாலியல் உறவு கொண்ட வக்கிர ஆசாமிகள்

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் கல்லறைத் தோட்டத்தில் புதைக்கப்பட்டிருந்த சிறுமியின் சடலத்தை தோண்டி எடுத்து, கொடூரமாக பாலியல் உறவு கொண்ட மர்ம நபரை போலீசார் தேடி வருகின்றனர். குஜன்வாலா மாவட்டம் கிலா டேடார் சிங் பகுதியைச் சேர்ந்த 6-ம் வகுப்பு மாணவி ஒருவர், நேற்று முன்தினம் தனது வீட்டில் உள்ள குளியலறையில் குளித்தபோது, மின்சாரம் தாக்கி இறந்தார். இறுதி மரியாதைக்குப் பிறகு அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது. இந்நிலையில், நேற்று காலையில் அந்த மாணவியை புதைத்த இடத்தில் பிரார்த்தனை செய்வதற்காக அவரது உறவினர்கள் கல்லறைத் தோட்டத்திற்கு சென்றனர். அப்போது அங்கு அலங்கோலமாகக் கிடந்த மாணவியின் உடலைப் பார்த்து உறவினர்கள் அதிர்ச்சியில் உறைந்தனர். புதைக்கப்பட்டிருந்த அந்த மாணவியின் சடலத்தை யாரோ மர்ம ஆசாமிகள் தோண்டி எடுத்து உடலுறவு கொண்டது தெரியவந்தது. இதனால் ஆத்திரமடைந்த உறவினர்கள், சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து உறவினர்களை சமாதானம் செய்தனர். மேலும், குற்றவாளிகள் தண்டனையில் இருந்து தப்ப முடியாது என்று உறுதி அளித்தபிறகே அவர்கள் போராட்டத்தை கைவிட்டனர். இந்த சம்பவம் தொடர்பாக கல்லறைத் தோட்டத்தின் வெட்டியானிடம் போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

"பெண் என்றால் பேயும் இரங்கும்" என்பார்கள். பெண்ணுக்கு இரங்காதவர்கள்கூட பெண்ணின் பிரேதத்தைப் பார்த்தால் இரக்கம் கொள்வார்கள். ஆனால், அந்த பிரேதத்தையும் இங்கே விட்டு வைக்கவில்லை. இத்தகைய காமுகர்களின் வக்கிர புத்திக்கு எத்தகைய தண்டனை கொடுத்தாலும் தகும்.

## எகிப்தின் இடைக்கால அதிபராக நீதிபதி அட்லி மஹ்மூத் மன்சூர் பதவியேற்பு

கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு இஸ்லாமியவாதியான முஹம்மது மோர்சி முதல் முறையாக ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டு அதிபராக பதவி ஏற்றுக்கொண்டார். ஆனால், அவர் கொண்டுவந்த சீர்திருத்தங்களுக்கு கடும் எதிர்ப்பு கிளம்பியது. அதிபர் மோர்சிக்கு எதிராக எதிர்க்கட்சிகள் உள்பட லட்சக்கணக்கானோர் போராட்டம் நடத்தி வந்தனர். அப்போது மோர்சியின் ஆதரவாளர்களுக்கும் எதிர்ப்பாளர்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதல் சம்பவங்களில் நூற்றுக்கணக்கானவர்கள் பலியாகினர். போராட்டக்காரர்களை ஒடுக்க ஒருபுறத்தில் ராணுவத்தை ஏவிவிடும் முஹம்மது மோர்சி, மற்றொரு புறத்தில் கட்சி தொண்டர்களையும் தூண்டிவிட்டு போராட்டக்காரர்களின் மீது தாக்குதல் நடத்தி வருகிறார் என்று ராணுவம் குற்றம் சாட்டியது. இதனையடுத்து இப்பிரச்சினைக்கு தீர்வு காண அவர் பதவி விலகுமாறு ராணுவம் 48 மணி நேர கெடு விதித்தது. ஆனால் மோர்சி பதவி விலக மறுத்தார். இதையடுத்து நேற்றிரவு அதிபர் மாளிகையை சுற்றி வளைத்த ராணுவம், மோர்சியை வீட்டுச் சிறையில் வைத்தது. மேலும், இடைக்கால அரசை அமைத்துள்ள ராணுவம், இடைக்கால அதிபராக நீதிபதி அட்லி மஹ்மூத் மன்சூர் பதவி வகிப்பார் என்று அறிவித்தது. இதனையடுத்து நீதிபதி அட்லி மஹ்மூத் மன்சூர் 67, இன்று அரசியலமைப்பு நீதிமன்றத்தில் இடைக்கால அதிபராக பதவியேற்றுக் கொண்டார். அடுத்த அதிபர் தேர்ந்தெடுக்கும் வரை மன்சூர் இடைக்கால அதிபராக நீடிப்பார்.



## ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள் – 22

பிரதீபா

1. நாளை மறுநாள் வெள்ளிக்கிழமை எனின், நேற்றைய தினத்துக்கு முந்திய நாளுக்கு முந்திய நாள் என்ன கிழமை?
   1. செவ்வாய் 2. ஞாயிறு 3. சனி

கீழ்வரும் கவிதையை வாசித்து விடையளிக்கவும்.

கற்பதே கடமை எனக்கொண்டு
கல்வியில் நாட்டம் கொண்டிடுவாய்
அறிவும், பண்பும் பெற்றுயர்ந்து
அகிலம் போற்ற வாழ்ந்திடுவாய்

2. நாம் கடமை எனக் கொள்ள வேண்டியது எதனை?
   1. அகிலம் போற்ற வாழ்வதை 2. அறிவைத் தேடிக் கற்பதை
   3. பண்பைப் பெற்று உயர்வதை
3. கவிதையில் குறிப்பிடப்படாத ஒரு கருத்து எது?
   1. கற்பதால் எமது அறிவு வளரும்
   2. கல்வியை உலகம் புகழ வேண்டும்.
   3. கற்பதில் நாம் விருப்புக் காட்ட வேண்டும்.
4. வாக்கியம் : பந்தி : கட்டுரை உடன் தொடர்புடைய சொற்கள் தொடர் எது?
   1. எலுமிச்சம்பழம் : தோடம்பழம் : ஜம்போலப்பழம்
   2. சென்ரிமீற்றர் : மீற்றர் : கிலோமீற்றர்
   3. கிராமசேவகர் : பிரதேச செயலாளர் : மாவட்ட செயலாளர்
5. "ஆற்றோ ரமரக்கி ளையில்ஒ ருகுரு விக்கூ டுஇரு ந்தது." இனைப் பிரித்து கருத்துள்ள வாக்கியமாக அமைக்கும் சரியான வாக்கியம் எது?
   1. ஆற்றோர மரக்கிளையில் ஒரு குருவிக்கூடு இருந்தது.
   2. ஆற்றோர மரக் கிளையில் ஒரு குருவி கூடு இருந்தது.
   3. ஆற்றோர மரக் கிளையில் ஒரு குருவிக் கூடு இருந்தது.
6. தண்டுத் துண்டங்களை நடுவதன் மூலம் கன்றுகளைப் பெற்றுக்கொள்ளக் கூடிய தாவரம்
   1. ரம்புட்டான் 2. மரவள்ளி 3. கறிவேப்பிலை
7. ஆபத்தான சந்தர்ப்பம் எனக் கருதமுடியாத ஓர் சந்தர்ப்பத்தைத் தெரிக.
   1. பயணிக்கும் தொடரூந்தில் ஏறுவதற்கு முயற்சித்தல்.
   2. தென்னை மரமொன்றை வெட்டும் போது அருகிலிருந்து பார்த்துக் கொண்டிருத்தல்
   3. ஆறொன்றின் ஆழமான இடத்தில் குளித்தல்
8. ஒரே மாகாணத்திற்குரிய இரண்டு நகரங்களும் முறையே.
   1. காலி, கொழும்பு 2. புத்தளம், இரத்தினபுரி
   3. திருகோணமலை, மட்டக்களப்பு
9. கைக்குட்டையில் பூவைத் தைக்கும் போது பூவில் காம்பைத் தைப்பதற்கு மிக உகந்த தையல் முறை யாது?
   1. வெட்டுக்குத்துத் தையல் 2. நரம்புத் தையல் 3. கம்பளித்தையல்
10. பிழையான கூற்றைத் தெரிவு செய்க.
    1. இந்தியாவிற்குத் தெற்கே இலங்கை அமைந்துள்ளது.
    2. இலங்கை கண்ணீர்த் துளி வடிவமுள்ள தீவாகும்
    3. இலங்கை ஆபிரிக்கக் கண்டத்தைச் சேர்ந்தது.
11. ஓர் நீர்ப்பாத்திரத்தில் மிதக்கக் கூடியதும், பாத்திரத்தின் அடிக்குச் செல்லக் கூடியதுமான பொருட்கள் முறையே
    1. மரத்துண்டு, நாணயம் 2. மரத்துண்டும், பியாஸ்ரிக் துண்டும்
    3. இரும்புத் துண்டும், மரத்துண்டும்

கீழ்வரும் தகவலை வாசித்து 12, 13 ம் வினாக்களுக்கு விடையளிக்கவும்

ஏழு மாணவர்கள் தம்மிடமுள்ள பணத்தைச் சமமாக இட்டு ஒன்று ரூ32 வீதம் 8 சாக்லேட்டுக்களையும், ஒன்று ரூ25 வீதம் 14 ஐஸ் பக்கற்றுக்களையும், ஒன்று ரூ 9 வீதம் 5 ஜெலிகளையும் வாங்கினர். எனின்,

12. மேற்கூறப்பட்ட மூன்று பொருட்களையும் வாங்கத் தேவையான மொத்தப் பணம் எவ்வளவு? 1. ரூ 606 2. ரூ 651 3. ரூ 645
13. ஒவ்வொரு நண்பனும் இட்ட பணம் எவ்வளவு?
    1. ரூ 108 2. ரூ 92 3. ரூ 93
14. ஒரு தேங்காய்க் குவியலில் 2/7 பங்கு பழுதடைந்துள்ளன. நல்ல தேங்காய்களின் எண்ணிக்கை 200 ஆகும். அக்குவியலில் உள்ள மொத்தத் தேங்காய்களின் எண்ணிக்கை யாது?
    1. 80 2. 280 3. 480
15. நான்கு பிள்ளைகளின் பிறந்த தினங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| தியானா | 2010. 11. 26 | தன்சிகா | 2010. 12. 24 |
| கிது | 2010. 12. 03 | ஹாசினி | 2010. 11. 05 |

இதன்படி பின்வரும் கூற்றுக்களில் பிழையானது எது?
1. தியானா கிதுவிலும் மூத்தவள்
2. ஹாசினி தன்சிகாவிலும் மூத்தவள்
3. தியானா ஹாசினியிலும் மூத்தவள்

பெயர்: ..............................................................
..............................................................
முகவரி: ..............................................................
..............................................................
..............................................................
பாடசாலை: ..............................................................

## தரம் ஐந்து மாணவர்களுக்கான புலமைப் பரிசிற் போட்டி

மேலுள்ள கேள்விகளுக்கான சரியான விடைகளை குறித்து அனுப்பி வாராந்தம் பரிசில்களை வெல்லுங்கள்.

மேலுள்ள கேள்விப் பகுதியை நிரப்பி வெட்டி அதனை மலைமுரசு, இல 159 A, ஏல் முக வீதி திருக்கோணமலை என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். வாராந்தம் பரிசுகளை வெல்லுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# "ஸலாம்" சொல்வதன் சிறப்பு

"நீங்கள் உயர்வை அடைய ஸலாமை தாராளமாகப் பரப்புங்கள்" என ரஸுலுல்லாஹ் அவர்கள் கூறியதாக ஹஜ்ரத் அபூ தர்தா அவர்கள் அறிவிக்கிறார்கள். *(நூல்கள் - தபரானீ, மஜ்மஉஸ்ஸவாயித்)*

"அல்லாஹு த ஆலா பூமியில் இறக்கி வைத்துள்ள அல்லாஹு த ஆலாவின் பெர்களில் ஒன்று "ஸலாம்" என்ற வார்த்தை. எனவே உங்களுக்கிடையே அதை நன்றாகப் பரப்புங்கள். ஏனெனில் ஒரு முஸ்லிம் ஒரு கூட்டத்தாரைக் கடந்து செல்லும்போது அவர் அக்கூட்டத்தாருக்கு ஸலாம் சொல்ல, அவர்கள் இவருக்குப் பதில் சொன்னால் அவர்களுக்கு ஸலாம் ஞாபமூட்டடியதன் காரணத்தால் ஸலாம் சொல்லியவருக்கு அந்த கூட்டத்தாரை விட ஒரு படித்தரம் சிறப்பு கிடைக்கிறது. அவர்கள் இவருக்குப் பதில் சொல்லவில்லையெனில் மனிதர்களை விடச் சிறந்த மலக்குகள் இவருடைய ஸலாமுக்குப் பதில் சொல்கின்றனர்'' என்று ரஸுலுல்லாஹ் அவர்கள் கூறியதாக ஹஜ்ரத் அப்துல்லாஹிப்னு மஸ்வூத் அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

*(நூல்கள் - தபரானீ, பஸ்ஸாம், தர்கீப்)*

"என் அருமை மகனே! நீர் உமது வீட்டில் நுழையும்போது வீட்டாருக்கு ஸலாம் சொல்லும்!" இது உமக்கும் உமது வீட்டாருக்கும் பரக்கத்துக்கு காரணமாக இருக்கும் என்று நபி (ஸல்) அவர்கள் தமக்கு கூறியதாக ஹஜ்ரத் அனஸ் அவர்கள் அறிவிக்கிறார்கள். *(நூல் - திர்மிதி)*

ம. வஹாப் சானாஸ்.

# உங்களுக்குத் தெரியுமா? பேரீத்தம் பழத்தின் மகிமை.



எம் பெருமானார் நபி (ஸல்) அவர்கள் நோன்பு திறக்கும்போது பேரீத்தம் பழங்களை கொண்டு நோன்பு திறந்துள்ளார்கள் என்பதை ஹதீஸில் அறிய முடியும்

எனவே அந்த பேரீத்தம் பழங்களின் சிறப்பை அறிந்து கொள்ளுங்கள்.

உடலுக்கு தேவையான சக்தி நாம் உட்கொள்ளும் உணவிலுள்ள மாப்பொருள் சக்தி மூலம் கிடைக்கிறது. ஒரு மனிதன் உட்கொள்ளும் உணவில் காணப்படும் மாப்பொருள் சக்தியில் மேலதிக மாப்பொருள் ஈரலில் சேமிக்கப்படும். ஒருவர் நோன்பு நோற்றிருக்கும்போதே அவரது உடலில் காணப்படும் சேமிப்பு மாப்பொருள், முக்கியமாக பயன்படுத்தப்பட்டு விடும்.

*கே.பீ. அப்துல் ஹாபிழ் - மூதூர் - 04*

## விண்ணுலகப் பயணமாம் மி:.றாஜ்

வல்லோனின் வஹியைச் சிரமெற்று,
வாகனமாம் புறாக்கினிலே வீற்றிருந்து
அல்லாஹ்வின் அர்ஷினைக்
காண்பதற்கு
அருமை நபி நாதர் சென்றார்.
மி:.றாஜ் பயணம்!

நல்லதொரு சன்மானம் கொண்டு வந்து,
நானிலத்து மாந்தருக்கு ஈந்தனாராம்!
எல்லையிலாப் பெரும் நன்மை
பெறுவதற்காய்,
ஏற்றமிகும் ஐவேளை தொழுகை
போதும்!

ஆயிரத்து நானூறு ஆண்டின் முன்பு
ஆகாயப் பயணமாம் மி:.றாஜ் சென்று,
ஐயிரண்டின் அரைப்பங்கு
வேளைகளை,
அல்லாஹ்வை வணங்குவதற்கு
ஒதுக்கினரே!

மண்ணகத்தில் காணாத புதுமைகளை,
மா நபிகள் கண்டு மனம் வியந்து
நின்றார்!
கண்கொள்ளாக் காட்சிகளாம்
சொர்க்கந்தனிலே!
காண்பதற்கு திறவுகோலாம் தொழுகை
ஒன்றே !

கஷ்டமான வேளையிலும்
கடைப்பிடித்தால்,
கவலைகள் யாவையுமே கலைந்து
போகும்
இஷ்டப்படி கண்ட்வாறு வாழ்ந்திடாது -
தூய இஸ்லாத்தின் கடமைகளை
மதித்திடுவோம்!

*கே.பீ. அப்துல் ஹாபிழ்*

## பெருமையின் விளைவுகள்....

- இறைநேசம் கிட்டாமை:
"(பெருமை கொண்டு) உன் முகத்தை மனிதர்களை விட்டும் திருப்பிக் கொள்ளாதே பூமியில் பெருமையடித்துக் கொண்டு நடக்காதே நிச்சயமாக கர்வங்கொண்டு பெருமையடிக்கும் எவரையும் அல்லாஹ் நேசிப்பதில்லை". (4-36)
- சத்தியத்திற்குத் திரை:
"பெருமையும், கர்வமும் கொண்ட ஒவ்வோர் இதயத்திலும் அல்லாஹ் முத்திரையிட்டு விட்டான்". (40-35)
- சுவனம் நுழையத் தடை:
"(பிர் அவ்ன் போன்றவரை) நரகிற்கு அழைக்கக்கூடிய தலைவர்களாகவே நாம் அவர்களை ஆக்கினோம். மறுமை நாளில் அவர்களுக்கு எத்தகைய உதவியும் கிடையாது". (28-41)
- இறுதி நிலை இழிவானது:
"நாம் பிர் அவ்னையும் அவனது இராணுவத்தையும் பிடித்து, அவர்களைக் கடலில் எறிந்து விட்டோம் இவ்வக்கிரமக்காரர்களின் முடிவு எவ்வாறாயிற்று என்பதை நீங்களே கவனியுங்கள்".
- நரக தண்டனை:
''கர்வங் கொண்டோரும் அடக்கியாளும் மனம் படைத்தோரும் நரகிலேயே [illegible]
[illegible]

# அல்குர் ஆனும் அறிவியலும்

## ஒரு குழந்தை ஏன் இரு வருடங்களுக்கு பாலூட்டப்பட வேண்டும்.

பாலூட்ட வேண்டும் என்று விரும்புகின்ற கணவனுக்காக தாய்மார்கள் தமது குழந்தைகளுக்கு முழுமையாக இரண்டு வருடங்கள் பாலூட்ட வேண்டும்.

(சூறத்துல் பகரா - 233)

உலக வாழ்க்கையைத் தொடர்வதற்காக தாயின் வயிற்றிலிருந்து பிறக்கின்ற சிசுவானது தனது வாழ்க்கைப் பருவத்தின் ஆரம்பப் பகுதியில் காணப்படுகின்றது. அதனது உடல் நிலை இவ்வுலக சூழல் நியமங்களுக்கு இசைந்து போகக்கூடிய நிலையை அடையவேண்டுமாயின் சில பயிற்சிகளும் அதற்கென வரையறுக்கப்பட்ட காலப்பகுதியும் அவசியமாகும். இவற்றை ஒரு குழந்தை தனது தாயினூடாக இரு வருடங்களுக்குள் அடைந்து கொள்ளக்கூடிய நிலையை அல்லாஹ் ஏற்படுத்தியுள்ளான். இதற்கென அல்லாஹ் பல அதிசயங்களை ஒரு தாய்க்கும் பிள்ளைக்குமிடையில் காணப்படும் பால் உறவினூடாக வழங்கப்படுகின்றது.

அவைகளாவன...

ஒரு குழந்தை பிறந்து சில மணி நேரங்களில் தாயில் சுரக்கும் பால் சீம்பால் எனப்படும். அதில் கொழுப்புச் சத்து குறைந்து புரதம் மிகையாகவும் இருக்கும். இதனால் குறுகிய காலத்தினுல் குழந்தையின் உடல் வளர்ச்சியடையும். இது தவிர குழந்தையின் உடலைப் பாதுகாக்கும் எதிர்ப்புப் பொருளும், துத்த நாகமும், விட்டமின் - ஏ யும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

தாய்ப்பாலில் காணப்படும் லக்டோபரீன் என்ற பால் காந்தம், நோய் எதிர்ப்புச் சக்தியை ஊக்குவிக்கின்றது. இப்பதார்த்தம் குழந்தையின் சிறுகுடலில் எல்பீ என்ற கிருமி வளர்ச்சியைத் தூண்டுகின்றது. இக்கிருமியானது சிறுகுடலில் காணப்படும் தீய கிருமிகளை அழிப்பதுடன் சக்கரை செரிமானமடைய உதவுகின்றது.

மற்றும் தாய்ப்பாலிலுள்ள கேசினின் என்ற பதார்த்தமானது பாலின் செரிமானத்தை துரிதப்படுத்தி குழந்தைக் கேற்படும் மலச்சிக்கலை தவிர்க்கின்றது. இது தவிர்ந்து இரத்தத்தின் மிக முக்கிய பகுதியான ஈமோகுளோபின், மையோ குளோபின், காடலேஸ் நொதியம் ஆகியன உருவாக தேவைப்படும் போதியளவான சத்துக்கள் தாய்ப்பாலில் உள்ளன.

இப்படியான விஞ்ஞானத் தத்துவங்களை உள்ளடக்கியே அல்குர்ஆனின் ஒவ்வொரு வசனங்களும் காணப்படுகின்றன என்ற உண்மையை இன்றைய நவீன யுகம் ஏற்றுக்கொண்டு அல்குர்ஆனை தமது ஆய்வுக்கோர் அடித்தளமாகவும் கொண்டுள்ளனர்.

இவ்விளக்கத்திலிருந்து ஏன் ஒரு குழந்தை இரு வருடங்கள் பாலூட்டப்படவேண்டும் என்ற செய்தியை நம்மால் புரிந்து கொள்ளமுடியும் எனக்கருதி எனது பேனா முனையை இத்துடன் நிறுத்திக்கொள்ளும் உங்கள் தோழன்....

ஏ.ஆர். எம். கஸ்ஜின்

## நற்சிந்தனை....

- ஓர் அடியான் பொய் சொன்னால் அவனிடமிருந்து வருகின்ற துர்வாடையின் காரணமாக அவனை விட்டு மலக்குகள் ஒரு மைல் தூரம் தள்ளிப் போய்விடுவர்.
- நிச்சயமாக அல்லாஹ்வுக்கு 99 பெயர்கள் உள்ளன. அவற்றை யாரேனும் மனனம் செய்துவிட்டால் அவன் சுவனம் புகுந்து விடுவான்.
- துன்ப காலத்தில் பொறுமையுடன் இருப்பது இறை வணக்கத்திற்கு ஒப்பாகும்.
- இரவில் யாஸின் சூறாவை ஓதுபவர் காலையில் பாவங்கள் மன்னிக்கப்பட்டவராக ஆகிவிடுகின்றார்கள்.
- எவன் தனது சகோதரனின் மானம் பறிபோவதைக் காத்துக் கொள்கிறாரோ அவருடைய முகத்தை விட்டும் இறைவன் மறுமை நாளில் நரக நெருப்பை அப்புறப்படுத்துவான்.
- அல்லாஹ்வின் அருளைப் பற்றி நம்பிக்கை இழக்காதீர் என்பது இறை வசனமாகும்.
- கஞ்சன் என்பவன் என் பெயர் கூறப்படும்போது என் மீது ஸலவாத்துக் கூறாதவனே என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*ம. வஹாப் சானாஸ்*

## நபி மொழிகளில் சில..

"தாம் சம்பாதித்தது ஹலாலா ஹராமா என்று மக்கள் பொருட்படுத்தாத ஒரு காலம் (இனி) வரும்!'' என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள், என அபூ ஹுரைரா(ரலி) அறிவிக்கிறார்கள்.

"ஒருவர் தம் கையால் உழைத்து உண்பதை விடச் சிறந்த உணவை ஒருபோதும் உண்ண முடியாது. தாவூத் நபி அவர்கள் தங்களின் கையால் உழைத்து உண்பவர்களாகவே இருந்தனர் என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்'' என மிக்தாம்(ரலி) அறிவிக்கிறார்கள்.

"பிறரிடம் யாசகம் கேட்படை விட ஒருவர் தம் முதுகில் விறகுக் கட்டைச் சுமந்து (விறகச்) செல்வது சிறந்ததாகும். அவர் யாசிக்கும்போது யாரும் கொடுக்கவும் செய்யலாம் மறுக்கவும் செய்யலாம்" என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்" இதை அபூ ஹுரைரா(ரலி) [illegible] இப்னு அவ்வாம்(ரலி) இருவரும் அறிவிக்கிறார்கள்.

## என் இறைவா!

பசித்திருக்கும் ஏழைக்கு
பசியைப் போக்கி விடு
என் இறைவா!
பாழடைந்த உள்ளத்தின்
பாவக்கறையை நீக்கி விடு
என் இறைவா!

சிறகடிக்கும் சிட்டுக்களின்
சின்னச் சின்ன ஆசைகளை
பூர்த்தி செய்து விடு
என் இறைவா!

கள்ளம் கொண்ட நெஞ்சுகளில்
கருணையினை ஊற்றி விடு
என் இறைவா!

அநீதியால் சூழப்பட்ட இவ்வுலகில்
நீதி எனும் போர்வையை
போற்றிவிடு
என் இறைவா!

வழி கேட்டில் பயணிப்பவர்களுக்கு
நேர்வழியை காட்டி விடு
என் இறைவா!

ஜே.எம். பஸீல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த வார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதானபார்வை...

## the SUNDAY TIMES

### உரமானியத்தை வெட்டியது அரசு

அரசினால் வழங்கப்படுகின்ற உர மானியத்தை சுமார் 100000 தொன்களால் குறைக்கும் தீர்மானத்தை அரசு மேற்கொண்டுள்ளது. இது மொத்த உரமானியத்தை 25வீதத்தால் குறைப்பதற்கு சமமாகும். இதற்கு வயல் நிலங்கள் அதிகளவில் உரமேற்றப்-பட்டிருப்பதே காரணமாகுமென அரசு தெரிவித்திருக்கின்ற போதிலும் கமக்கார சங்கங்கள் இதனை மறுத்துள்ளன. இந்நடவடிக்கையால் அரசாங்கம் வருடாந்தம் சுமார் 7 பில்லியன் ரூபாய்களை சேமிக்கும் என தெரிகிறது. தற்போதய உரமானியச் செலவு வருடத்திற்கு 26.2 பில்லியன் ரூபாய்கள் ஆகும். வருடமொன்றுக்கு சுமார் 700,000 தொன்கள் உரப்பசளை இறக்குமதி செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது.

### இலங்கையின் பரிமாற்ற வீதம் தடுமாறுமா?

அமெரிக்க டொலரின் பெறுமதி அதிகரித்து வருகின்ற நிலையில் அதற்கெதிரான இலங்கையின் பெறுமதி மேலும் தளம்பலடையலாம் என வங்கியாளர்களும் பிணைத் தரகர்களும் எச்சரிக்கை விடுத்துள்ளனர். எனினும் இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்வைத் தடுப்பதற்காக மத்திய வங்கி தன்னிடமுள்ள நிதி ஒதுக்குகளை நிதிச்சந்தைக்குள் பாய்ச்ச முற்படும் என மேலும் அவர்கள் தெரிவித்துள்ளனர். கடந்த 7 மாதங்களில் 27.06.2013ல் அமெரிக்க டொலரொன்றின் விலை 131 ரூபா என்ற அதிகூடிய எல்லையைத் தொட்டிருந்தது. 124 ரூபாவுக்கும் 126 ரூபாவுக்கும் இடையே தளம்பலடைந்து வந்த அமெரிக்க டொலரொன்றின் விலை தற்போது 130 ரூபாவாக புழக்கத்திலிருப்பது குறிப்பிடத்தக்கது. இதற்குக் காரணம் அமெரிக்க பொருளாதாரத்தின் முனைப்பான வளர்ச்சியே எனவும் இலங்கை அதற்கெதிராக எதனையும் செய்யமுடியாது என்றும் மத்திய வங்கியின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். மேலும் இந்தியாவிற்கும் இதே நிலமை ஏற்பட்டுள்ளதை அவதானிக்குமாறும் அவர் விளக்கியுள்ளார். இந்திய ரூபா 54இல் இருந்து அமெரிக்காவுக்கு எதிராக தற்போது 60 இந்திய ரூபாவாக மாறி இருப்பதை அவர் கோடிட்டுள்ளார்.

### மசகெண்ணெய் இழுபறியில் 7.5 பில்லியன் செலுத்தி வெளிவந்தது இலங்கை

சுமார் 5 வருடங்களாக ஸ்டேன்டட் சாட்டர்ட் (Standard Charted) வங்கிக்கும் இலங்கை அரசிற்கும் இடையே இருந்த மசகெண்ணெய் பிரச்சனையான ஹெட் ஜிங் இழுபறியிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு சுமார் 7.5 பில்லியன் ரூபாய்களை செலுத்தியுள்ளது இலங்கை. கடந்த வாரம் 60 மில்லியன் அமெரிக்க டொலர்களை பெற்றோலிய கூட்டுத்தாபனம் ஸ்டேன்டட் சாட்டர்ட் (Standard Charted) வங்கிக்குச் செலுத்தியது.

### கோத்தாவின் கைப்பேசியை ஒட்டுக்கேட்டது சர்வதேச புலனாய்வு நிறுவனம்

தனது கைத்தொலைபேசியினை யாரோ ஒட்டுக்கேட்பதாக இலங்கையின் பாதுகாப்புச் செயலர் கைத்தொலைபேசி சேவை வழங்குனரிடம் முறையீடு செய்துள்ளார். தேசிய பாதுகாப்பு தகவல்களை பெற்றுக்கொள்ளும் நோக்குடனேயே சிறந்த திட்டத்துடன் இயங்கும் குழுவொன்று தனது தொலைபேசியை ஒட்டுக்கேட்பதாக கோத்தபாய முறையிட்டுள்ளார். இதைத்தொடர்ந்து இவ்விடயத்தை விசாரணை செய்ய உருவாக்கப்பட்ட விசேட புலனாய்வு குழுவானது



கொழும்பிலுள்ள சர்வதேச நிறுவனமொன்றும் அதனுடன் சேர்ந்து விறள் மிக்க சர்வதேச புலனாய்வு நிறுவனமொன்றும் இவ்விடயத்தில் தொடர்புபட்டிருப்பதாக சிங்கள பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. கோத்தாபாயவின் கைத்தொலைபேசி தவிர மேலும் பல மிக முக்கிய நபர்களின் தொலைபேசிகள் ஒட்டுக்கேட்கப்பட்டுள்ளன.

### பாட்டாளியிடமிருந்து பறந்தது அணுவளத்துறை

பாட்டாளி சம்பிக்க ரணவக்க அமைச்சராகவுள்ள துறைகளிலிருந்து அணுவளத்துறை மீளப்பெற்றுக்-கொள்ளப்பட்டுள்ளதாக ஜுன் 24ந் திகதியின் வர்த்தமானிப் பத்திரிக்கை தகவல் வெளியிட்டுள்ளது. இதனால் தொழினுட்ப மற்றும் ஆராய்ச்சி துறைகளுக்கு மட்டுமே அவர் அமைச்சராக உள்ளார்.

## SUNDAY OBSERVER

Sri Lanka's English Newspaper with the largest circulation

### போலி வைத்தியர்களுக்கு 5 ஆண்டுச் சிறை

மேல் மாகாணத்தில் மட்டும் சுமார் 430க்கும் மேற்பட்ட போலி வைத்தியர்கள் தனிப்பட்ட வைத்திய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக போலி வைத்தியர்களைக் கண்டுபிடிக்கும் அமைப்பின் தலைவர் தெரிவித்தார். கொழும்பைத் தவிர்த்து சுமார் 1600 போலி வைத்தியர்கள் செயற்படுகின்றனர் என அவர் மேலும் புள்ளிவிபரமிட்டார். போலி வைத்தியர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கைகளை ஏற்படுத்துவதுடன் அவர்களுக்கு 5 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிப்பது தொடர்பாக தாம் அட்டோனி ஜெனரல் அலுவலகத்திடம் கலந்துரையாடி வருவதாக அவர் மேலும் தெரி-வித்தார். மேல் மாகாணத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள 430 போலிகளில் சுமார் 220 பேர் சுதேச மருத்துவ போலிகள் எனத் தெரிகிறது. அவர்கள் சுதேச வைத்தியர்களாக இருக்கின்ற போதும் மேல்நாட்டு மருத்துவ முறை-களையும் அதற்கான மருந்துகளையும் பாவிப்பதாலேயே அவர்களைப் போலியாகக் கொள்ள வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

### எதிர்க்கட்சியினர் அனைவரும் பாராளுமன்ற தெரிவுக் குழுவில் பங்குபெற வேண்டும்

அரசியற் தீர்வொன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டுமாயின், அதற்கு அனைத்து எதிர்க்கட்சிகளும் அதற்கென உருவாக்கப்பட்டுள்ள பாராளுமன்ற தெரிவுக் குழுவில் பங்கேற்க வேண்டும் என்றும் சிரேட்ட அமைச்சர் டியு குணசேகர தெரிவித்தார். அரசினால் பெயரிடப்பட்டுள்ள அங்கத்தவர் குழுவின் அமைச்சர் டியு குணசேகரவின் பெயரும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கு முன்மொழியப்-பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. எதிர்க்கட்சிகள் அங்கம் பெறவில்லை-யாயின் அத்தெரிவுக்குழு முழுமை-யானதாக இருக்காது என்றும் இனப்பிரச்சனைத் தீர்வுக்கான அரசின் தெரிவுக் குழுவாக மட்டும் அது போய்விடும் என்றும் டியு குணசேகர மேலும் தெரிவித்தார்.

### சிறந்த புகையிரத கடவை தடுப்புக்கு ஒரு மில்லியன் பரிசு

வினைத்திறன் வாய்ந்ததும் நீண்ட பாவனை கொண்டதுமான புதிய வகை புகையிரத கடவைத் தடுப்புகளை கண்டுபிடித்துத் தருபவர்களுக்கு ஒரு மில்லியன் ரூபா பணப்பரிசை வழங்கவுள்ளதாக உயர்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. பாதுகாப்பற்ற புகையிரத கடவைகளில் பெருமளவு விபத்துக்கள் நிகழ்வதால் இதனைத் தடுப்பதற்காகவே இவ்வகைக் கண்டு-பிடிப்புக்களை ஊக்கப்படுத்தவிருப்பதாக மேலும் தெரிவித்துள்ளது.

### வாகன ஓட்ட அனுமதி பத்திரத்தை வழங்குவதற்கு புதிய முறை

வாகன ஓட்ட அனுமதிப் பத்திரத்தினை வழங்குவதற்கான புதிய தன்னியக்க முறையொன்றை உருவாக்-கும் முயற்சியில் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் ஈடுபட்டு வருகிறது. எழுத்துப் பரீட்சைகளில் பெருமளவு பணத்தைப் பெற்றுக்-கொண்டு பரீட்சகர்கள் தகுதியற்றவர்-களையும் சித்திபெறச் செய்கிறார்கள் என்று கிடைத்த பெருமளவு முறைப்-பாடுகளைத் தொடர்ந்து இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

### நாளாந்த இழப்பு 110 மில்லியன்

நீர் மின்உற்பத்தியை நிறுத்தும் இலங்கை மின்சார சபையின் முடிவால் நாளொன்றுக்கு சுமார் 110 மில்லியன் ரூபாய்களை இழக்கும் நிலை தோன்றியுள்ளது.

தேசிய மின்சக்தி நுகர்வோர் பாதுகாப்பு அமைப்பன் தலைவர் தகவல் தருகையில் திட்டமிடப்படாத பராமரிப்பு வேலைகள் மற்றும் எதிர்பாராத எந்திரத் தடைகள் போன்றவற்றாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதனால் எரிபொருள் மின்சக்தியை அதிக விலை கொடுத்து தனியாரிடம் வாங்க வேண்டிய துர்பாக்கிய நிலைக்கு இலங்கை மின்சார சபை தள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## The Sunday LEADER

### வரமாட்டோம் பா.தெ.கு — ஐதேக மற்றும் ததேகூ

அண்மையில் அரசியலமைப்புத் திட்டத்தினைத் திருத்துவதற்கு என உருவாக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழுவிற்கு அங்கத்தவர்களை அனுப்புவ-தில்லலை என்ற முடிவை பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க வும் தமிழத்-தேசியக் கூட்டமைப்பும் மக்கள் விடுதலை முன்னணியும் எடுத்துள்ளன எனத் தெரியவருகின்றது.

இப் பாராளுமன்றத் தெரிவுக்-குழுவிற்கு நிமால் ஸ்ரீபால டி சில்வா தலைமையிலான 19 அங்கத்தவர்களை ஏற்கனவே ஆளுங் கட்சி நியமித்துள்ளது. இவர்கள் அனைவரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்கள் மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது.

ஐ.தே.க எதையெல்லாம் தமது ஆட்சிக்காலத்தில் செய்தார்களோ அவற்றை எல்லாம் இல்லாமற் செய்வதற்கே தற்போதைய அரசு முயன்று வருகின்றது என திரு. ரவி கருணாணாயக்க மேலும் தெரிவித்தார்.

### செலவுடன் கூடிய தோல்வி — இ.பெ.கூ.

இலங்கைக்குத் தரம் குறைந்த எரிபொருளை எடுத்து வந்த கப்பலைக் கைப்பற்ற முடியாது போனதால் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத் தாபனம் பல லட்சம் ரூபாய்களை இழந்துள்ளது.

தரங்குறைந்த எரிபொருளைக் கொண்டு வந்தமையால் இக் கப்பல் இலங்கைத் துறைமுகத்திற்குள் அனுமதிக்கப்படாமலேயே மூன்று நாட்களின் பின் துபாய்க்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.

இவ்வாறு அக்கப்பல் துறைமுகத்திற்கு வெளியே தரித்து நின்ற மூன்று நாட்களுக்கும் நாளொன்றுக்கு முறையே ·3.527 மில்லியன் ரூபாய்களை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் செலவாக ஏற்படுத்திவிட்டே அக்கப்பல் சென்றுள்ளது என பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

### மேர்வின் ஆதரவாளர்கள் முன்னேஸ்வரத்தில்....

அமைச்சர் மேவின் சில்வா வின் ஆதரவாளர்கள் சண்டே லீடர் பத்திரிகையைச் சபித்து முன்னேஸ்வரம் ஆலயத்தில் பலநூறு தேங்காய்களை உடைத்து வழிபட்டுள்ளனர்.

பத்திரிகையையும் அதன் உரிமையாளரையும், பிரதான ஆசிரியரையும், கடந்த வாரங்களில் அமைச்சரையும் அவரது மகனையும் பற்றிப் பத்திரிகையில் எழுதிய ஊடகவியலாளரையும் சபித்தே இந் நேத்திக் கடனை அவர்கள் ஆலயத்திற் செலுத்தியுள்ளனர்.

### கேள்வி எழுப்பியுள்ளது ஜே.வி.பி

மாத்தளை மெஜிட்ரேட் நீதிமன்ற நீதிபதியின் திடீர் இடமாற்றம் தொடர்பாகச் சந்தேகங்கள் இருப்பதுடன் அவ்வாறு ஏன் இடமாற்றம் நிகழ்ந்துள்ளது எனவும் ஜே.வி.பி. கேள்வி எழுப்பியுள்ளது.

இவ்விடமாற்றத்தின் பின் நீதிமன்ற விசாரணைகள் நியாயமாக நடைபெறுவது சந்தேகமே எனவும் ஜே.வி.பி சந்தேகங் கொண்டுள்ளது.

இவ்விடமாற்றம் ஆனது விசாரணைகளில் சில தரப்பினர் தமது ஆதிக்கத்தைச் செலுத்த வழிவகுக்கும் எனவும் ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அழையா விருந்தாளியாக திருமலையில் திமிங்கிலம்

கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று திருகோணமலை உட்துறைமுக வீதியையொட்டிய இயற்கைத்துறைமுக கடற்பரப்பில் அழையா விருந்தாளியாக ஆபத்தானதும் அழகானதுமான ஆழ்கடல் உயிரினம் சுமார் 25 அடி நீளமுள்ள திமிங்கிலம் ஒன்று திசைமாறி வருகை புரிந்தது.

இதைக் கண்டு ரசிப்பதற்காக கடும் வெயிலையும் பொருட்படுத்தாது நூற்றுக்கணக்கானோர் உட்துறைமுக வீதியில் நிறைந்து காணப்பட்டனர்.

திருமலை கடற்படையினரின் வழிகாட்டலில் மீண்டும் ஆழ்கடல் நோக்கி தன் பயணத்தை தொடர்ந்தது.



## அவுஸ்திரேலியப் பயணப் பணத்திற்காய் படுகொலை செய்யப்படவிருந்த இளைஞர்கள் மீட்பு

அவுஸ்திரேலியாவிற்கு கள்ளமாகப் பயணித்தவர்கள் செலுத்த வேண்டிய நிலுவைப் பணத்-தொகைக்காக அவர்களது சகோதரர்-களைக் கடத்திக் கொலை செய்ய முயன்ற குழுவொன்றை காவல்துறை கைது செய்துள்ளது.

இரண்டு நாட்களாகப் பணயக் கைதிகளாக இவர்கள் இருவரும் களுத்துறை பயாகல பிரதேசத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர். அதன் போது செலுத்த வேண்டிய மிகுதித் தொகையையும் தராவிட்டால் இவ்விரு இளைஞர்களையும் கொலை செய்யப் போவதாகவும் கடத்தல்காரர் அவ்விரு இளைஞர்களின் வீட்டாருக்கும் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தி-லிருந்தே இவர்கள் கடத்திச் செல்லப் பட்டதாகவும் அவர்களிடமிருந்து 16 லட்சம் ரூபாய் நிலுவைத் தொகையைப் பெறமுடியாது எனத் தெரிந்த மாத்திரத்தில் அவர்கள் இருவரையும் கொலை செய்ய கூலிப்படையுடன் கடத்தல்காரர்கள் 150,000 பேரம் பேசியதாகவும் தெரியவருகின்றது. அப் பேரம் படிந்ததால் கடத்தப்பட்ட இருவரையும் கடத்தல்காரர்கள் மத்துகம பெலவத்தைக்கு அழைத்துச் செல்லும் வழியில் காவல் துறையின் கண்களில் மாட்டியுள்ளனர்.

வீதி ரோந்துப்பணியிலிருந்த காவல்துறையினர் சந்தேகங்கொண்டு இந்த அறுவரையும் விசாரணை செய்த போதே விடயம் வெளிச்சத்திற்கு வந்துள்ளது. இதனைத் தொடர்ந்து பணயக் கைதிகள் இருவரையும் மீட்ட காவல்துறையினர் சந்தேகத்தின் பேரில் நால்வரைக் கைது செய்து விசாரணை நடாத்தி வருகின்றனர்.

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழு உதயம்

ஜூன் 4ம் திகதியன்று அவசரக் கலந்துரையாடல் ஒன்றை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகள் ஐந்தும் கொழும்பில் கூட்டியிருந்தன.

அச் சந்திப்பில் முக்கிய முடிவாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கான ஒருங்கிணைப்புக் குழுவொன்று உருவாக்கப்பட்டுள்ளது. தமிழரசுக் கட்சி சார்பில் அதன் தலைவர் இரா.சம்பந்தன், செயலாளர் மாவை சேனாதிராஜா, சுமந்திரன், தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் அதன் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி, ஈ.பி.ஆர்.எல்.எவ் சார்பில் செயலாளர் நாயகம் சுரேஸ் பிரேமச்சந்திரன், சிவசக்தி ஆனந்தன், டெலோ சார்பில் அதன் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், கோ.கருணாகரன், என்.சிறீகாந்தா, ஹென்றி மகேந்திரன், புளொட் சார்பில் அதன் தலைவர் த.சித்தார்த்தன், ராகவன், சிவநேசன் (பவன்) ஆகியோர் இந்த சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

இச்சந்திப்பின்போது ஒவ்வொரு கட்சியிலிருந்தும் மூவர்வீதம் பதினைந்து பேரை உள்ளடக்கிய தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுவை அமைப்பதென்றும், ஐந்துபேர் கொண்ட தேர்தல் நியமனக்குழு மற்றும் நிதிக்குழுவை நியமிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது. மேலும் தேர்தல் சம்பந்தமான விடயங்களை இந்த ஒருங்கிணைப்புக் குழுவும் நியமனக் குழுவும் கலந்து ஆலோசிக்குமென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## காயான்கேணியில் 15,000 சுடுகலன் ரவைகள் மீட்பு

மட்டக்களப்பின் வாகரைப் பிரதேசத்தில் காயான்கேணிக் கடற்கரைப் பகுதியில் விடுதலைப் புலிகளால் புதைத்து வைக்கப்பட்டிருந்து ரி-56 சுடுகலனுக்கான பெருந்தொகை ரவைகள் மீட்கப்பட்டுள்ளன.

இத் தகவலை உறுதி செய்த வாகரைக் காவல்துறைப் பொறுப்பாளர் தமக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்தே இவை மீட்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்தார். புதன் கிழமை முதல் இரண்டு நாட்களாக நீடித்த தேடுதலின் போதே இவை கைப்பற்றப்பட்டுள்ளன.

## கோணேசபுரிக் கிராம சுனாமிக் குடியிருப்பாளர்கள் ஆர்ப்பாட்டம்

திருகோணமலையில் சுனாமிக் குடியிருப்பு வீட்டுத்திட்டங்களில் ஒன்றான கோணேசபுரி மக்கள் ஆர்ப்பாட்ட-மொன்றை ஜுலை 4ம் திகதி மாலை பட்டணமும் சூழலும் பிரதேசச் செயலர் அலுவலகத்தின் முன்றலில் அரங்கேற்றி-யிருந்தனர்.

தமது வீடுகளில் வாடகைக்கு உள்ளவர்கள் சிலர் கோணேசபுரி கிராம சேவகர் எஸ்.சதீஸ்வரனை தாக்கியுள்-ளனர் என்றும் தற்போது அவர் திருகோணமலை பொது வைத்திய-சாலையின் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவித்த ஆர்ப்பாட்டக்காரர்கள், தாக்கிய குற்றவாளிகளை உடனடியாக கைதி செய்யுமாறும் தமக்கான பாதுகாப்பை உறுதி செய்யுமாறும் மற்றும் அவ் வீடுகளில் இருந்து வாடகை குடியிருப்பாளர்களை அகற்றுமாறும் கோரிக்கை விடுத்தனர்.

பிரதேச செயலாளர் திருமதி சசிதேவி மற்றும் உதவி அரசாங்க அதிபர் அருள்ராசா மற்றும் பொலிஸ் அதிகாரிகள், பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சரின் இணைப்பாளர்கள் ஆகியோர் ஆர்ப்பாட்டம் நடைபெற்ற இடத்திற்கு பிரசன்னமாகி இருந்தனர். தமது வீடுகளில் வாடகைக்கு உள்ளவர்கள் சிலர் கோணேசபுரி கிராம சேவகர் எஸ்.சதீஸ்வரனை தாக்கியுள்ளனர் என்றும் தற்போது அவர் திருகோணமலை பொது வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவித்த ஆர்ப்பாட்டக்காரர்கள், தாக்கிய குற்றவாளிகளை உடனடியாக கைது செய்யுமாறும் தமக்கான பாதுகாப்பை உறுதி செய்யுமாறும் மற்றும் அவ் வீடுகளில் இருந்து வாடகை குடியிருப்பாளர்களை அகற்றுமாறும் கோரிக்கை விடுத்தனர்.

பிரதேச செயலாளர் திருமதி சசிதேவி மற்றும் உதவி அரசாங்க அதிபர் அருள்ராசா மற்றும் பொலிஸ் அதிகாரிகள், பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சரின் இணைப்பாளர்கள் ஆகியோர் ஆர்ப்பாட்டம் நடைபெற்ற இடத்திற்கு பிரசன்னமாகி இருந்தனர். அத்துடன் தொலைபேசி முலம் மக்களுக்கு கருத்து தெரிவித்த பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சரும் திருகோணமலை அபிவிருத்திக்குழு தலைவருமான சுகந்த புஞ்சி நிலம, நீதிமன்ற அனுமதி பெற்று அவ்வாடகை குடியிருப்பாளர்களை வீடுகளில் இருந்த எழுப்புவதாக தெரிவித்ததை தொடர்ந்து ஆர்ப்பாட்டகாரா?கள் சுமூகமாக அவ்விடத்தைவிட்டு கலைந்து சென்றனர்.



## திருகோமலைத் தமிழ் விழா - 2013

தில்லைநாதன் பவித்ரனின் ஒழுங்கமைப்பில் திருமலை புனித மரியாள் கல்லூரிக் கலையரங்கில் முதன்மை விருந்தினர் பேராசிரியர் மௌனகுரு, சிறப்பு விருந்தினர்கள் திருமலை எழுத்திலக்கிய சமூகத்தினர் ஆகியோரின் பங்குபற்றலுடன் 2013ம் ஆண்டின் தமிழ்விழா இன்று (06.07.2013) ஏற்பாடாகியுள்ளது.

திருமலை நவம், கனகசபாபதி சரவணபவன், மு. மயூரன், மாதினி விக்னேஸ்வரன் ஆகியோர் சிறப்புரைகளை ஆற்ற உள்ளனர். சிந்து நடைக் காத்தவராயன் கூத்தினை சேனையூர் மத்திய கல்லூரி மாணவர்கள் நிகழ்த்வர், ஜே.பி.ஜே. ஆனந்த ரமணனின் "ஏணிப்படிகள்" நாடகமும் அரங்கேறவுள்ளது.


மலைமுரசு MALAIMURASU பத்திரிகையில் பணியாற்ற வடிவமைப்பாளர் தேவை.

Photoshop, Pagemaker

தெரிந்திருத்தல் அவசியம்

உடனே தொடர்புகொள்ளவும்.

0777555738



VBC

aat SRI LANKA Association of Accounting Technicians of Sri Lanka

STUDENT REGISTRATION NOW ON

for 2014 JANUARY EXAMINATION

வகுப்புகள் ஆரம்பம்

2013 ஜுலை மாதம் 13ம் திகதி

சனிக்கிழமை காலை 9.00 மணி

aat SRI LANKA நிறுவனத்தினால் திருகோணமலையில் அங்கீகரிக்கப்பட்ட ஒரே கல்லூரி

(aat மாணவர் பதிவுப் புத்தகத்தின் 26வது பக்கத்தைப் பார்க்க - VIHE)

Veal Business College

No. 159A Sea View Road, Trincomalee 777 555 738



மலைமுரசு பத்திரிகையின் உத்தியோகபூர்வ விநியோகத்தர்கள் – திருமலை நகர லியோ கழகத்தினர்

The official distributor of Malaimurasu is Leo club of Trincomalee Town

இப் பத்திரிகை, ஸ்ரீராம் பிரதர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் 06.07.2013 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org